16·4

# கீழ்வேளூர்
# முருகன் பிள்ளைத் தமிழ்

(குறிப்புரையுடன்)

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து 21 ஆவது அதிபர்
கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமார சுவாமித் தம்பிரான் சுவாமிகள்
அவர்களின் அருளாசியுடன் பதிப்பிக்கப் பெற்றது

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-600 090
1985

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலைய
வெளியீடு எண் 88
294.55 16

முதற்பதிப்பு 1985—1000 பிரதிகள்

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-600 090

பதிப்பாசிரியர் :
வித்துவான் சு. பாலசாரநாதன்

விலை: ரூ. 4-00

9085
LIBRARY.
Acc No
30/5/96

Printed at : Jeevan Press, Madras-600 005

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி
முத்துக்குமாரசுவாமித்தம்பிரான்
சுவாமிகள் அவர்கள்
அதிபர், ஸ்ரீகாசிமடம்

திருப்பனந்தாள்—612504
(தஞ்சை மாவட்டம்)
31-1-1985

# ஆசியுரை

திருஞானசம்பந்தராலும், திருநாவுக்கரசு சுவாமிகளாலும் பாடப்பெற்ற திருக்கீழ்வேளூர்த் தலத்து முருகன் மீது அந்தகக்கவி வீரராகவர் பரம்பரையில் தோன்றியவரால் இயற்றப்பெற்ற இந்தப் பிள்ளைத் தமிழின் மூலச் சுவடி டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் தேடிச் சேகரித்த பல சுவடிகளில் ஒன்றாகும். அச்சில் வெளிவராத நூல்களை டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையத்தார் அவ்வப்பொழுது ஆராய்ந்து பதிப்பித்து வருவதைத் தமிழுலகம் நன்கு அறியும். அந்த வகையில் கீழ்வேளூர் முருகன் பிள்ளைத் தமிழ் என்ற இந்நூலை அன்பர்கள் விரும்பியவண்ணம் இப்பொழுது மூலம் குறிப்புரையுடன் பதிப்பிக்கப் பெறுவது கண்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் இயற்றியுள்ள மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழ், முத்துக்குமாரசுவாமிப் பிள்ளைத்தமிழ், கந்தர்கலி வெண்பா முதலிய நூல்களிலுள்ள கருத்துக்களையொட்டி இந்தப் பிள்ளைத் தமிழ் பாடப்பெற்றுள்ளமை ஆராயத்தக்கது.

செவ்வேளைப் பற்றிய பிள்ளைத் தமிழ் ஆதலின் இந்நூலைப் பலர் பாராயணம் செய்து பயன்பெறுவது திண்ணம். பாடல்கள் எளிய நடையில் அமைந்துள்ளன.

இப்பதிப்பை வெளியிட்ட டாக்டர் ஐயரவர்கள் நூல் நிலைய நிர்வாகக் குழுவினர் பாராட்டிற்குரியர்.

வாழ்க சீரடியாரெல்லாம்.

சிவ சிவ

சுபம்

உ

முருகா

அருள்மொழியரசு

திருமுருக. கிருபானந்தவாரியார்

*அவர்கள் வழங்கிய*

## சாற்றுக்கவி

கீழ்வேளூர் கந்தக் கிருபா கரனுக்குத்
தாழ்வில்லாப் பிள்ளைத் தமிழ்தந்தான்—ஏழ்பார்
புகழ்அந்த கக்கவி வீரப் புலவன்
இகபரமும் எய்தும் இனிது.

# முகவுரை

"சேடுலாவிய கங்கையைச் சடையிடைத் தொங்கவைத் தழகாக
நாடுலாவிய பலிகொளு நாதனுர் நலமிகு கீழ்வேளூர்ப்
பீடுலாவிய பெருமையர் பெருந்திருக் கோயிலுட் பிரியாது
நீடுலாவிய நிமலனைப் பணிபவர் நிலைமிகப் பெறுவாரே."

—சம்பந்தர்.

பிள்ளைத்தமிழ் என்பது தமிழ் மொழிக்குரியனவாகக் கூறப்படும் தொண்ணூற்றுருவகைப் பிரபந்தங்களுள் ஒன்று. பிள்ளைத் தமிழுக்கு இலக்கணம் விளக்கமாகக் கூறுகின்ற நூல் பாட்டியல் நூலாகும். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே பிள்ளைத்தமிழ் பாடுவதற்குரிய கருப்பொருள் இருந்தது என்பது தெரிகின்றது. சங்க இலக்கிய நூல்களான பட்டினப்பாலையிலும், கலித்தொகை யிலும் சிறுதேர், சிற்றில் பருவங்களைப் பற்றிக் குறிப்பிடப் பெற்றுள்ளன.

வெண்பாப்பாட்டியல், பன்னிருபாட்டியல், நவநீதப் பாட்டி யல், சிதம்பரப் பாட்டியல், இலக்கண விளக்கம், பிரபந்த தீபிகை, முத்துவீரியம், சாமிநாதம், பிரபந்த தீபம், பிரபந்தத் திரட்டு, பாரதி தீபம் முதலிய நூல்கள் பிள்ளைத்தமிழுக்கு இலக்கணம் கூறுகின்றன.

கடவுளரையேனும், ஆசிரியரையேனும், உபகாரிகளையேனும் குழந்தையாகப் பாவித்துக் காப்பு முதலிய பத்துப் பருவங்கள் அமைத்துப் பருவத்திற்குப் பத்துப் பாடல்கள் வீதம் பாடுவது பிள்ளைத்தமிழ்.

பிள்ளைத்தமிழ் பற்றிய விரிவான செய்திகளை இந்நூல் நிலைய வெளியீடாகிய சொர்ணபுரி அம்பிகை பிள்ளைத்தமிழ் என்னும் நூலின் முகவுரையில் காண்க.

## கீழ்வேளூரைப் பற்றிய ஐயரவர்கள் குறிப்பு:-

"சரவணப் பொய்கை:- சந்நிதிக்கு வெளியே தென்பால் உள்ளது. நாற்புறமும் படிக்கட்டும் மண்டபமும் உள்ளன. மிகவும் ஜீர்ணம். இதனுள் நிருதி மூலையில் கிணற்று வடிவமாக இந்திர தீர்த்த முள்ளது; இந்திரனுக்குக் குருசாப விமோசனத்தைச் செய்தது.

கடிக்குளம்:- இப்பொய்கை வேற்படையால் உண்டாயிற்று. வெளியிலிருந்து முதற் பிராகாரம் தோட்டம். வெப்பந்தவிர்த்து ஆண்டார் மேவிய பட்டீசுரர்; முத்துப்பந்தர் உற்சவம். விநாயகர்- சுந்தர விநாயகர்-இரண்டாவது பிராகாரம் தென்கிழக்கு, பெரிய திருவுருவம்-அஞ்சுவட்டத்தம்மன்;சேட தீர்த்தம் குண்டலாகாரம்; சேஷபுரீசுவரர் ஆதி சேஷனுல் உண்டாக்கப்பட்டவை. கோயிலுக்கு வெளியில் மேற்கில் அக்னிதீர்த்தம், பிரம தீர்த்தம், கோயிலுக்கு

வெளியே நிருதி மூலேயில் பெருமாள்—வாயுமூலே—வேங்கடாசலபதி.

மேலேக் குமரர். சண்முகர். இரண்டாம் பிராகாரம் வாயு மூலேயில் மலேக்கோயில் சபேசருக்குப் பத்துப் புஜங்கள். மாறியாடியவர்க்கு ஆனி மகத்தில் தரிசனம்.

பதரி விநாயகர்:- இலந்தையடிப் பிள்ளேயார். உட்பிராகாரம் நிருதிமூலே. அறுபத்து மூவரும் தொகையடியார்களும் உளர். அகத்தியருக்குக் கால் மாறி ஆடியது. உட்பிராகாரத்தில் மேற்புறத்துச் சுவரில் ஆதீனத்தாரும் ஏகோஜி துக்கோஜி வடிவங்களும் உள்ளன. ஸ்தல விருக்ஷம் இலந்தை. இதன் கீழ் அகத்தியலிங்கமுள்ளது. ஷை மரத்திற்கு அபிஷேக நிவேதனம் உண்டு. விமானம் முழுவதும் கருங்கல் திருப்பணி. பஞ்சபூத லிங்கங்களும் உள்ளன. ஸ்வாமி–அக்ஷயலிங்கர், கேடிலியப்பர். அம்பிகை–சுந்தரகுசாம்பிகை: வனமுலேநாயகி.

குபேர பிம்பம்:- அம்மன் ஸந்நிதியின் தெற்கு நோக்கிய ஆலயம்; சிவகைங்கரியத்தால் வறுமையுற்ற சந்திரகுப்தன் என்னும் வைசியனுக்கு வேண்டிய பாக்கியங்களேக் கொடுக்கும் பொருட்டுக் குபேரன் இங்கு வந்தான்.

அஞ்சுதிக்கு அம்மன்:– அஞ்சுவட்டத்தம்மன்: எண்புயம்; ஈசானம். மலே–சித்திரகூடமலே.

பூசரவணபுரம்:- கீழ்வேளூர். மார்கழி மாதம் அமாவாசை நிறைபணி.

அரசாணிக்குளம்:; அக்னிதீர்த்தம், ஸோமாஸ்கந்தர் சந்நிதியில் வேங்கடபதி பிள்ளேயின் வடிவம் இடத்தூணிலுள்ளது. க்ஷேத்திர சபாபதி வேறு. பிரளய காலத்தில் அழியாத இத்தலத்தில் பல ஸ்தல மூர்த்திகளும் இங்கே எழுந்தருளினர் என்பர்.''

இந்தப் பிள்ளேத்தமிழின் ஆசிரியர் கவிவீரராகவராக இருக்கலாம் என்று தோன்றுகிறது. அந்தகக்கவிவீரராகவர் இவருடைய மாதாமகர். அந்தகக்கவி வீரராகவருடைய காலம் 16–ஆம் நூற்றுண்டின் இறுதியிலும், 17–ஆம் நூற்றுண்டின் தொடக்கத்திலும் என்று தெரிகிறது. அந்தகக்கவி வீரராகவர் இயற்றிய சேயூர் முருகன் பிள்ளேத் தமிழில் பருவ வைப்புமுறை, வெண்பாப்பாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரப்பாட்டியல், பிரபந்தமரபியல், இலக்கணவிளக்கம் முதலிய நூல்களில் கூறியுள்ள விதிப்படி சிறபறை, சிற்றில், சிறுதேர் என்று அமைந்துள்ளது.

இந்நூலில் அம்புலிப் பருவத்திற்குப்பின் சிற்றில், சிறுதேர்ப் பருவங்கள் அமைந்துள்ளன. இந்நூலிற்கும் அந்தகக்கவி வீரராகவரே ஆசிரியராக இருப்பின் பருவ முறையை மாற்றியமைத்துப் பாடியிருப்பாரா? என்ற வினு எழுகின்றது. சேயூர் முருகன்பிள்ளேத் தமிழில் அருணகிரியைப்பற்றி விநாயக வணக்கப் பாடலில் குறிப்பிடுகின்ருர். இந்நூலில் குறிப்பிட வில்லே. மேலும் அந்நூல் நடைக்கும் இந்நூல் நடைக்கும் வேற்றுமை நிரம்ப உள்ளது.

கல்குளம் குப்புசாமி முதலியார் அவர்கள் 1902ஆம் ஆண்டில் சேயூர் முருகன் பிள்ளைத் தமிழ் நூலைப் பதிப்பித்துள்ளார். அவர் எழுதியுள்ள நூலாசிரியர் வரலாற்றில் அந்தகக்கவி வீரராகவ முதலியார் அவர்கள் இயற்றிய நூல்கள்— 'திருக்கழுக்குன்ற புராணம், திருவாரூருலா, சந்திரவாணன் கோவை, கயத்தாற்ற ரசனுலா, சேயூர்க் கந்தர் பிள்ளைத் தமிழ், சேயூர்க் கலம்பகம், திருக் கழுக்குன்ற மாலை'' என்று கூறியுள்ளார். கீழ்வேளூர் முருகன் பிள்ளைத் தமிழை இயற்றியதாகத் தாம் பதிப்பித்துள்ள நூல்களில் குறிப்பிடவில்லை. ஐயரவர்களும் அந்தகக் கவி வீரராகவர் கீழ் வேளூர் முருகன் பிள்ளைத்தமிழ் இயற்றியதாகத் தாம் பதிப்பித் துள்ள நூல்களில் குறிப்பிடவில்லை. ஆகவே அந்தகக்கவி வீரராகவர் இந்நூலுக்கு ஆசிரியர் என்று கூறுவது பொருத்தமா? என்று ஆராய வேண்டும். சேயூர் முருகன் பிள்ளைத்தமிழில் காப்புப் பருவத்தில் கங்காதேவி, சரவணப் பொய்கை, வேலாயுதம், பைரவக் கடவுள், கார்த்திகைத் தாயர், பிரணவப் பொருள் முதலியவற்றையமைத் துப் பாடியுள்ளார். ஆனல் கீழ்வேளூர் முருகன் பிள்ளைத்தமிழ்க் காப்புப் பருவத்தில் இந்திரன், சப்தமாதர்கள், முப்பத்து முககோடி தேவர் இவர்கள் காக்க என்று பாடியுள்ளார். இந்த முறை வைப்பையும் கூர்ந்து கவனிக்க வேண்டியதாக உள்ளது. ஆகவே இந்நூலின் ஆசிரியர் அந்தகக்கவி வீரராகவரா? அல்லது கவி வீரராகவரா? என்று உறுதியாகச் சொல்ல முடியவில்லை.

இந்நூல் வடசொற்கள் விரவிச் செம்பாகமாக அமைந்திருக் கிறது. முருகனே முதற்கடவுள் (கௌமாரம்) என்பதை விளக்கிக் கூறுகின்றார். எளிய நடையில் பெரும்பாலும் ஆற்றொழுக்கே அமைந்துள்ளது. எதுகை நயம் பொருந்திய பாடல்கள் சில உண்டு.

செங்கீரைப் பருவம் முதற்பாடலில் சைவ சித்தாந்தக் கருத் துக்களை நுட்பமாகத் தெரிவிக்கின்றார். இந்நூலில் திருப்புகழ்ப் பாடல்களின் கருத்துக்களும், கந்தர் கலிவெண்பா கந்தரனுபூதி முதலிய நூல்களின் கருத்துக்களும் பிரதிபலிக்கின்றன என்பது குறிப்புரையில் காட்டியுள்ள மேற்கோளின் மூலம் விளங்கும். ஆசிரியர் கீழ்வேளூர்ச் சிறப்பினை விரிவாகக் கீழ்க்காணும் தொடர் களால் விளக்குகின்றார்.

''சித்திபெறு முத்தமர்கள் மன்னு கீழ்வேளூர்''
''தெள்ளு புனற்பழன மன்னு கீழ்வேளூர்''
''அரசவன்னம் செங்கமல மலர்மீது மன்னு கீழ்வேளூர்''

முத்தப்பருவம் முதற்பாடலில் ''முன்னைப் பொருளுக்கு உபதேசம் மொழிவாய்என்று முருகனைச் சிறப்பிக்கின்றார். வருகைப்பருவம் முதற் செய்யுளில் பராசரமுனிவரின் புத்திரர்கள் மீன் உருவம் பெற்ற வரலாற்றையும், அது நீங்கிய வரலாற்றையும் கூறி யுள்ளமை அறியத்தக்கது.

இந்நூலின் பாடல்களை நன்கு ஆராய்ந்து பார்க்கும் போது நூலாசிரியர் தம்மை மறந்து ஆனந்தானுபவத்தையடைந்து பாடி யிருக்கிறார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கும்.

டாக்டர் ஐயரவர்கள் சேமித்து வைத்த ஏட்டுச் சுவடிகளில் எண் 478 உள்ள சுவடியில் இந்நூலின் மூலம் உள்ளது. ஐயரவர்கள் காலத்திலேயே காகிதப் பிரதி எடுத்து வைக்கப்பெற்றுக் காகிதப் பிரதியின் துணைகொண்டு இந்தப் பிள்ளைத்தமிழ் பதிப்பிக்க லாயிற்று. மூலச் சுவடி சிதிலமாதலின் குறையாயுள்ள செய்யுட் களைப் பூர்த்தி செய்ய இயலவில்லை.

கீழ்வேளூர் தவில் வித்துவான் திரு.கோவிந்தராசன் என்பவர் இந்தப் பிள்ளைத்தமிழ் எப்படியேனும் வெளிவரவேண்டுமென்று அடிக்கடி நூல் நிலையத்திற்குக் கடிதம் எழுதி வந்தார். திருப்பனந் தாள் ஸ்ரீ காசிமடத்தின் காறுபாறும், அத்திப்புலியூர் கிராமத்தின் ஏஜண்டும் ஆகிய திரு. எஸ். சுப்பையா முதலியாரும் நூல் பதிப் பிக்க வேண்டுமென ஆர்வம் தெரிவித்தார்.

இந்த நூற்பணிக்கு உதவ வேண்டுமென்று திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து 21வது அதிபர் கயிலைமாமுனிவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களிடம் விண்ணப்பித்தபொழுது, அவர்கள் நூல் நிலைய வெளியீடாகப் பதிப்பிக்கக் கட்டளையிட்டதோடு பொருளு தவியும் செய்தார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி கலந்த வணக் கத்தைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம். அறம் வளர்க்கும் ஸ்தாபனமாக விளங்கும் ஸ்ரீகாசிமடம் தமிழுக்கும், சைவத் திற்கும் ஆற்றிவரும் நற்பணிகள் பல என்பதைப் பலரும் அறிவர். முக்கியமாக, தோத்திர நூல்களையும், சைவ சாத்திர நூல்களையும், பன்னிரு திருமுறைகளையும் பதிப்பித்து அனைவரும் எளிதில் பெறுமாறு தொடர்ந்து செய்வித்து வருவது போற்றற் குரியது.

இந்நூல் பதிப்பாகும்போது உடனிருந்து ஒப்புநோக்குதல் முதலிய பணிகளைச் செய்தவர் நூலகத்தில் பணிபுரியும் திரு. எஸ். சாயிராமன் ஆவர். கீழ்வேளூர்த் தலத்தைப் பற்றி எழுதி உதவிய வலையப்பேட்டை திரு. ரா. கிருஷ்ணன் அவர்கள் பாராட்டுக் குரியவர்.

இதனை அன்பர்கள் பெற்றுப் படித்து முருகன் திருவருளைப் பெறவேண்டுகிறோம்.

**க. சுப்பிரமணியன்**
*கௌரவப் பாதுகாவலர்,*
*டாக்டர் உ. வே. சாமிநாதையர்*
*நூல்நிலையம்,*
*பெசன்ட் நகர், சென்னை – 600 090.*
***14—1—1985.***

**சு. பாலசாரநாதன்**
*ஆராய்ச்சித் துறைப்பிரிவு.*

# கீழ்வேளூர்

தஞ்சை மாவட்டத்தில் நாகப்பட்டினம் வட்டத்தில் உள்ள பாடல் பெற்ற திருத்தலங்களில் ஒன்று கீழ்வேளூர். "கீழ்வேளூர் ஆளுங் கோவைக் கேடிலியை நாடுமவர் கேடிலாரே" என்பது அப்பர் பெருமான் அருள்வாக்கு. "எண்தோள் ஈசர்க்கு எழில் மாடம் எழுபது" எடுத்த கோச்செங்கட் சோழன் கட்டிய அற்புதமான மாடக் கோயில்களில் ஒன்று கீழ்வேளூர் ஸ்ரீஅட்சய லிங்க சுவாமி திருக்கோயில். திருவாரூர்-நாகப்பட்டினம் பஸ் வழியிலும், ரயில் வழியிலும் அமைந்த இத்தலத்தில் கேடியலிப்பர் ஆலயம் ஊரின் நடுவே அமைந்துள்ளது.

இத்தலத்திற்குச் சித்திரகூட பர்வதம், தக்ஷிண பத்ரிகாச்சிரமம், பூசரண்யபுரம், கீழ்வேளூர் என்ற பல பெயர்கள் உண்டு.

ஆதிசேஷனுக்கும் வாயுபகவானுக்கும் நடந்த போரில் மகாமேரு பர்வதத்தில் உள்ள கொடு முடிகளைப் பிடுங்கி எறிந்த போது அது இத்தலத்தில் விழுந்து சித்ரகூட பர்வதமாக வளர்ந்துள்ளது என்பர்.

தேவர்கள் திருப்பாற்கடல் கடைந்த காலத்தில் பாற்கடலிலிருந்து ஒரு துளியானது இத்தலத்தில் வந்து விழுந்தமையால் இப்பகுதியானது இலந்தைக் காடாக விளங்கியதாம். எனவே பதரிவனம் என்ற பெயர் ஏற்பட்டது.

முருகவேள் இறைவனைப் பூஜித்ததாலும், கைலாசகிரியை அடுத்த ஸ்கந்தகிரி என வழங்கும் மேல் வேளூரைப் போன்று பூலோகத்தில் உள்ள இது கீழ்வேளூர் என்னும் பெயரைக் கொண்டுள்ளது.

கேடிலியப்பர் என்னும் திருநாமம் கொண்ட ஸ்ரீஅட்சயலிங்க சுவாமி மூலஸ்தானம் 18 படிகளைக் கொண்ட உயரமான மாடத்தில் அமைந்துள்ளது. அம்பிகையின் திருநாமம் சுந்தரகுசாம்பிகை. அம்பிகை தனிக்கோயிலில் சுவாமிக்கு இடதுபுறம் காட்சியளிக்கிறாள்.

முருகப் பெருமான் ஒருமுகம் நான்கு கரங்கள் கொண்டு பின் இருகரங்களில் வஜ்ரம் சக்தி ஏந்தி, முன் இருகரங்கள் அபய வரத முத்திரையில் நின்ற கோலத்தில் வடதிசை நோக்கி காட்சியளிக்கிறார். இருபுறம் அம்பிகை கிடையாது. வடதிசை நோக்கி நின்று வீரஹத்திதோஷம் நீங்கும் பொருட்டுச் சிவபெருமானைப் பூசித்துப் பேறு பெற்றதாகப் புராணம் கூறுகிறது. முருகப் பெருமான் திருநாமம் பாலசுப்ரமண்யர். இப்பெருமான் தவம் செய்யும்போது பராசக்தி காளி ரூபத்தில் வடதிசை நோக்கி முருகன் சன்னிதிக்கு முன்புறம் அமர்ந்து நான்குதிசை, ஆகாயம் ஆகிய ஐந்து இடங்கள் மூலமாக இடையூறுகள் வராவண்ணம் காத்தருளிய அஞ்சுவட்டத்தம்மன் சந்நிதி சிறப்பாக அமைந்துள்ளது. எட்டுக் கரங்களையுடைய

பத்ரகாளி அம்சமாகத் திகழ்கிறுள். இத்தலத்தில் நடராஜர் கால்மாறியாடிய அற்புதமான கோலம் கண்டு இன்புறத்தக்கது.

இத்தலத்தில் சிறப்பாகக் குபேரனுக்குத் தனி ஆலயம் உள்ளது- இத்தலத்தில் வாழ்ந்த வேதியரின் வறுமை நீங்கச் சிவபெருமான் கட்டளைப்படி குபேரன் அவருக்குச் செல்வத்தை அளித்துக் காத்தார் என்று கூறப்படுகிறது. மேலும் ஜுரதேவர் சந்நிதியும் சிறப்பாக உள்ளது. அக்னி, யமன், சந்திரன், ஆதிசேஷன், வசிஷ்டர், மார்க்கண்டேயர், அகஸ்தியர், சந்திரகுப்தன் ஆகியோர் இறைவனை வழிபட்டுப் பேறு பெற்றவர்களாம்.

சரவணதீர்த்தம் கோயில் முன்புறம் அக்னிமூலையில் உள்ளது. முருகப்பெருமான் வேலாயுதத்தால் உண்டாக்கி அதில் நீராடி இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றதாக வரலாறு. மற்றும் இந்திர தீர்த்தம். அக்னிதீர்த்தம், யமதீர்த்தம் சேஷ தீர்த்தம், பிரம தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம் ஆகிய திருக்குளங்கள் உள்ளன.

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், ஆகிய இருவரும் போற்றிப் பரவிய இத்தலத்திற்கு உலா, பிள்ளைத்தமிழ் முதலியன உள்ளன. மேலும் தாய்மகள் ஏசல் முதலிய சிற்றிலக்கியங்களும் உள்ளன. சங்கீத மும்மணிகளில் ஒருவரான ஸ்ரீ முத்து சுவாமி தீக்ஷிதர் இத்தலத்தில் அட்சயலிங்க சுவாமியைப் பாடி அருள் பெற்ற வரலாறு ''அட்சயலிங்க விபோ'' என்ற அவரது சங்கராபரண ராக கீர்த்தனையிலிருந்து அறிய முடிகிறது.

சித்திரை மாதத்தில் பிரம்மஉற்சவமும், ஐப்பசியில் ஸ்கந்த சஷ்டி உற்சவமும், மார்கழி அமாவாசை தினத்தில் இந்திரன் குரு சாபவிமோசனம் காரணமாகச் சோமாஸ்கந்தரைப் பூசை செய்து சாபம் நீங்கியதாகக் கூறப்படும் உற்சவமும், ஆனி மாதம் மக நட்சத்திரத்தில் அகத்திய முனிக்கு வலது பாதம் தரிசனம் அளித்த சிறப்புத் திருநாளும் கொண்டாடப்படுகின்றன.

சித்திரை மாத உற்சவத்தில் அலங்கரிக்கப்பட்ட ஓலைச்சப்பரத்தில் எம்பெருமான் காட்சியளிக்கும் நன்னுளில் ஸ்ரீ முத்துசுவாமி தீக்ஷிதரின் ''அட்சயலிங்க விபோ'' கீர்த்தனையின் அமைப்பு பிரதிபலிக்கும்.

கோச்செங்கட் சோழனுல் கட்டப் பெற்ற இக்கோயிலில் அநபாய சோழனுல் இரண்டாம் பிராகாரம் முதலிய திருப்பணிகள் செய்யப் பெற்றன. ராஜராஜ சோழனது கல்வெட்டுக்கள் கட்டுமலை தென் சுவரில் உள்ளன. தஞ்சையை ஆண்ட துகோஜி மகாராஜரது திருப்பணிகள் மற்றும் திருவாபரணம் செய்து தொண்டு புரிந்ததை மெய்க்காவல் முக மண்டபத்தூணில் உள்ள கல்வெட்டு இயம்புகின்றது.

சுவாமியின் மூலவர் விமானம் ஸ்தூபியின் அளவிற்குக் கருங்கல்லால் செய்யப் பெற்றது. சோமாஸ்கந்தரின் மேற்குப் புறத்தில்

வேணுகான விஷ்ணுவின் திருவுருவச்சிலை நாதஒலியுடன் கூடியது சிறப்பாகும்.

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் நிர்வாகத்தில் உள்ள இக்கோயில் முப்பது ஆண்டுகட்குமுன் திருப்பணி செய்யப் பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இத்தலத்திற்கு அருகில் கடம்பன் பெயர்களையுடைய ஐந்து தலங்களில் முருகப் பெருமான் சிவபெருமானைப் பூசித்ததாக வரலாறு தெரிவிக்கிறது. அவை கோயில் கடம்பன், ஆழிக் கடம்பன் (ஆழியூர்), பெருங்கடம்பன், கடம்பன் வாழ்க்கை, அசுரக் கடம்பன் என்பனவாகும். இவைகளில் அனைத்து ஊர்களிலும் முருகன் வடக்கு நோக்கித் தவநிலையில் உள்ளது குறிப்பிடத்தக்க தாகும்.

இத்தலத்தில் இன்னிசைக் கலைஞர்கள் பலர் வாழ்ந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்,
இணை ஆசிரியர்
'அருணகிரிநாதர் அடிச்சுவட்டில்'

முருகன் திருவருட் சங்கம்
சென்னை-5
1-1-1985

## பிழையும் திருத்தமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 6 | 28 | கனகதம | கனதம |
| 7 | 6 | வருள்மொழி | வருள்பொழி |
| 13 | 22 | சிவைண் | சிறைவண் |

உ

கணபதி துணை

# கீழ்வேளூர் முருகன் பிள்ளைத்தமிழ்

## காப்பு

பொன்னுலகு மின்னுலவு முகில்பொழியு மகிலமும்
பூங்கமல மலரோனுமென்
பூவைவண் ணத்துவண் ணத்துவனும் வச்சிரப்
புருகூத ஞதியெவரும்
உன்னுபெரு வாழ்வுபெற விமையா சலத்துவளர்
உமைபாகன் முன்னமுதவும்
உயர்வார ணத்துமுக னருவார ணக்கடவுள்
உபயபத மலர்பணிகுவாம்
கன்னன்மொழி வன்னமுலை வாரணம் விரும்புறு
கரும்பினைய ரும்புநகைசேர்
கானவர்கள் வானவர்க ளாகவரு வல்லிபடர்
கனகவர் கற்பதருவை
மன்னுகதிர் வேலவனை மாலவனை மாமனென
மகிழ்கருணை மகமேருவை
வாலசுப் பிரமணிய சுவாமியைப் பரவுமென்
மதுரமிகு தமிழ்தழையவே.

## 1. காப்புப் பருவம்

### திருமால்

1. சீர்கொண்ட பகிரண்ட கோடிபல பெற்றுநிறை
செவ்வி தளராத உமையாள்
சிதமதி வேணியர னிருவர்கண் மணியை
யுயர்தேவர் பெருவாழ்வை மலிதேன்

நீர்கொண்ட தண்டலைக ளெண்டிசையு மண்டியெழில்
நிலவு கீழ்வேளூ ரில்வாழ்
நித்தியனை வாலசுப் பிரமணிய சுவாமிதனை
நிருமலனை இனிது காக்க
வார்கொண்ட செங்கமலை யென்னுமின் னிணமருவி
மகிழ்க ருணைமா ரிபெய்து
மன்னுமூ வுலகெனுங் கழனியிடை யுயிரென்ன
வருபெரும் பயிர்வ ளர்த்தே
ஏர்கொண்ட மார்பின்மணி பைந்துளவு தந்தவொளி
யெனும்வான வில்லை மருவி
இயன்முல்லை மாதரென வருதோகை யோகையுற
எழில்பெற்ற நீல முகிலே. 1

## சிவபெருமான்

### (சந்தவிருத்தம்)

2. பாலார் தேமொழி நீள்க ரும்புயல்
போலார் மைக்குழல் பங்கரைக் கூர்த்திடு
பானு ளாரிரு ளாய்வ ளைந்தெழும்
ஆலா லத்தொளிர் கண்டரைச் சிர்ப்பெறு
பாவான் மூவர்மு ளுளி யம்பிய
தேவா ரப்பொரு ணம்பரைப் பாற்பொலி
பாரா வாரச மான வின்பம
தாளு வற்புத விம்பரைத் தேக்கிய
கீலா லாதிப் ளுதி யெண்டிசை
ஆள்வார் சக்கர மங்கையிற் சேர்த்தவர்
கேழார் தாமரை மீதி ருந்திடு
வேதா மெய்த்தவ ரம்பரத் தீர்த்தர்கள்
கீழேழ் பாதள லோக ரம்புவி
மேலோர் நித்தமு மன்புவைத் தேத்திய
கீழ்வே ளூருறை யோர்க சுந்தர
வாழ்வா மட்சய லிங்கரைப் போற்றுதும்
நாலா காரண நூன்மொ ழிந்தருள்
கோமா னைச்செய துங்கனைப் பாட்டியல்
நாளு பேதவி ராக வண்டிமிர்
தேனீ பத்தொடை மொய்ம்பனைப் பாற்றிகழ்

ஞானு காரவி லாச சம்ப்ரம
லீலா நற்பிர சங்கனைக் கார்த்திகை
நாண்மா ஞர்தரு பால லர்ந்தசெவ்
வாயா ரக்கொளு மைந்தனைப் போர்த்தொழில்
மாலார் சூரொடு நேரெ திர்ந்திகல்
வேலால் வெற்றிசெ யெந்தையைத் தேற்றமில்
மாசார் கானவ ராய்வ ரும்பல
மால்யா னைக்கொரு சிங்கனைப் பாக்கிய
வானு டேகுடி யாக வும்பரை
யேதா பித்திடு நண்பனைச் சேட்செலும்
மாமே காரந டாவி வந்தருள்
சீரார் பொற்புறு கந்தனைக் காக்கவே. 2

## உமை

3. வலஞ்செய் துளத்தருள் பெறுபரி பாகர்கள்
மாசறு பரசுக மருவக் கொடுத்தவள்
வணங்கு சிரத்தினர் மகபதி நான்முகன்
மால்பத முறவருள் வரத கரத்தினள்
வயங்கு வனக்கிளி புரிதவ மியாதுகொல்
வாவென மதுர நன்மொழியைப் பயிற்றுவள்
மகிழ்ந்த வனித்தொகை பெறுமொரு தாயெனச்
வாழவருள் கருணைமெய் வடிவுற்ற சிற்பரை
இலங்கு விழிக்கயல் குழையண்ணி காதினி
லேதமில் குவளையி னுலவப் படைத்தவள்
எழுந்த மதிக்கிணை யிதுவென மான்மத
மேர்பெற வெழுதிய திலகத்து நெற்றியள்
இருண்ட களிற்றிடை மதனலர் வாளிகள்
ஏயும தெனமல ரளகத்தில் வைத்தவள்
இலந்தை வனத்துறை வன்முலை நாயகி
ஈசுவரி பதமலர் இணையைப் பழிச்சுதும்
குலங்கொள் தயித்திய இருள்கெட் வேலிடு
கோழியோர் வனமக னைப்பெருத்திடு குரும்பை
முலைத்துணை வனிதை புலோமசை கோமகள்
தழுவியணைச் சுகத்தனை குழைந்த கருத்துடன்
வழிபடு சீரியர் கூறிய முறைதரு வைப்பரப்பிய

விலங்கு திரைக்கடல் புகுமொரு சூரனை
வேல்கொடு பிளவு செய்த தருவனைச்
சகத்தினில் வியந்த விரதத்தை நிலவு
பராசரன் மேவறு சிறுவர்கள் பணியற்புதத்தனை
விளங்கு மிசைத்துறை மகதியினு ரதன்வேள்வியி
லெழுந்தகர் நடவச் சமத்தனை விளம்பு
சமர்க்கொரு கரையென லாநவ வீரர்கள்
முனிவரு குகனைப் புரக்கவே. 3

## விநாயகர்

4. உரைசெய்மறை என்னவியல் பாரதக் கதையினையோர்
உலவைகொடு பொன்னினுயர் மேருவெற்
புறவெழுதும் ஆனையைப் பார்ப்பதி
பரமசிவன் முன்னுதவு பாலனைப் புயலணவு
பதரிவன மன்னுகண நாதமெய்க்
கணபதியை ஆர்வம் வைத்தேத்துதும்
விரவுமெழில் அன்னநடை மேவுபொற் கலசமுலை
விசயவயில் அன்னவிழி மோகனக்
குறவனிதை பாகனைத் தோற்றிய
விரவியொளி மின்னுகதிர் வேலனைப் பணியுமவர்
இனியகதி நண்ணவருள் வாலசுப்
பிரமணிய சுவாமியைக் காக்கவே. 4

## திருமகள்

5. அகல மாகப் பொன்படைத்தார்
அவனி புரப்பார் பகைதுரப்பார்
அழியாப் புகழும் பெறுவரென
அறிவிப் பதற்குப் பரந்தாமன்
நிகழும் மார்பின் வீற்றிருந்து
நினைத்த வெவையுங் கொடுத்தருளி
நிறையு முரையும் பேரொளியு
நிலவு பொன்னைப் பணிகுவாம்

சகல நூலுந் தருவானைச்
சைவ சமய பூஷணனைத்
தருவா னவர்தஞ் சிறைவிடுத்த
தனிச்சே வகனை மயிற்குகனை
புகலு மிலஞ்சி மலர்ப்பசுந்தேன்
பொழியும் வளஞ்சே ரிலந்தைவனப்
புனிதன் மகனைச் சரவணப்பூம்
பொய்கைக் கரைசைப் புரக்கவே. 5

## கலைமகள்

6. மந்தரமோர் மத்தாக வந்தரத் திந்துவொரு
மதலையாய் விதலையறியா
வாசுகியை நேசமுறு நாணெனச் சேணமரர்
வைத்துவரு வித்தமுதந்
தந்தசுவை கைப்பென்று மெய்ப்புலவர் செப்பும்வகை
சதுரநவ ரசகோமளத்
தண்ணெனக் கவிச்செல்வ நல்குபா ரதியுகள
சரணதா மரைபணிகுவாம்
இந்திரன்முதல் வானவர்கள் நயனமுந் தானவர்க
ளேலுமட மாதர்விழியும்
இலகுவல மாடவிக நிசாசரர்தம் விழியும்எழில்
இனியசுரர் தினமுமகிழு
மந்தண்மொழி மடமாதர் விழியுமிட னுடவோ
ரயில்வேல் பிடித்தகுகனை
ஆறுமலர் முகனையருள் பதரிவன வரன்மகனை
ஆதியைக் காக்கவென்றே. 6

## பிரமன்

7. அந்தண் மொழியை யொருதன்மைத் தாக்கா
தெவர்க்கும் வெவ்வேரு
யாக்கு கெனப்பா மடந்தையைத்தன் னணிசேர்
மணிநா மிசையிருத்தி
உந்தி வனசத் திருந்துக முறுமெப்
பொருளும் படைத்தருளும்
உயர்நான் முகத்து மறைக்கிழவ னுவந்து
தினமுந் தனிபுரக்க

முந்து சுடர்வேற் கரத்தானை முழுதும்
கொடுக்கும் வரத்தானை
முதிரு நிகமச் சிரத்தானை மூழ்கும்
விசயச் சரத்தானைச்
சந்த மயில்வா கனத்தவனைத் தயவு
பெருகு மனத்தவனைத்
தமிழ்சேரி லந்தை வனத்தவனைத் தயங்கு
விசாகத் தினத்தனையே. 7

## இந்திரன்

8. மருவுந் தனக்கோட் டிணைதால வட்டந்
துதிக்கை பெறுதெய்வ
மால்யா னையினை முன்மணந்து வளர்சொற்
கவள மருத்துவித்துப்
பெருகுங் குசங்கை வசமாக்கிப் பிரியாப்
பாசத் தொடுசேர்க்கும்
பெரிய பாக னெனுமுருகப் பிரானைக்
குகனைத் தனிபுரக்கத்
தருவி னீழல் விரவுசுரர் தடமா
மகுடத் தலைபணியத்
தளிர்க்கற் பகமுங் கடல்மணியுஞ் சாற்று
மேவல் ஆற்றிவரக்
குருமென் மலர்க்கொந் தளவளகக் கொவ்வைக்
கனிவாய் அயிராணிக்
குதலைப் பசுந்தேன் செவிமடுத்துக் குலவுங்
குலிசப் பெருமாளே. 8

## சப்த மாதர்கள்

### (சந்தவிருத்தம்)

9. கனகதம னியவரை வண்ணவிற் கோட்டினள்
கலையினை நடவுமோர் வெம்முனைக் காட்டினள்
கடல்புகு மவனியை முன்னையிற் சேர்த்தவள்
கதிர்விரி திகிரியை மன்னுகைக் கேற்றவள்
இனமலி சதுமறை யுண்மையைத் தேறினள்
எழுதரு வளநகர் விண்ணவர்க் காத்தவள்

இனமயில் மிசைவரு மன்னமெய்ப் பேட்டினள்
எனுமிவ ரெழுவரை நன்னயத் தேத்துதும்
சினமொடு விழிதொறும் வன்னியைக் காட்டிய
திடமுளத் தகுவர்கள் பின்னிடப் போர்த்திடு
சிறைமயிலுய திண்ணனைக் காட்டிய
திகழ்தரு வருள்மொழி கண்ணனைத் தேக்கமழ்
வனம்வரு குறமக ளண்ணலைப் பார்ப்பதி
மனமகிழ் மழலைச்சொல் சண்முகத் தீர்த்தனை
மணமலி சரவண முன்னனைக் கீர்த்திகள்
மருவுபத ரிவன மன்னனைக் காக்கவே.

## முப்பத்து முக்கோடி தேவர்

10. ஞானசுக மிக்கவனை வேலவனை யோகனை
நலங்கிளர் கிரிக்குல மிடந்தொறும் விருப்பனை
ஞாலவலை யச்சுடிகை சோதிதரு சேடனு
நடுங்கிட நடத்திய விளங்கு மயிலப்பனைக்
கோனவனை வெட்சிமலர் கோடன்மலர் தேனுறை
கெழும்பிரச முற்றிடு கடம்பணி புயத்தனைக்
கூவிவரு குக்குடப் பதாகையனை மேதகு
குறிஞ்சியனை வித்தக முவந்தருண் முகத்தனை
வானமலி மைப்புயல்கள் சாளர நிலாவிய
வளந்தரு மணிப்புரிசை யெங்கணு மதத்தொடு
வாதுவரை விட்டுலவும் வேழமென மேவிய
வரம்பெறு திருப்பதி யிலங்கைவன நித்தனை
ஆனதொகை முப்பதொரு கோடியிரு கோடிகள
ணந்திடு புகழ்க்குலவு மும்பர்க ளெனச்சொலு
மாதவரு ருத்திரர்கள் மேவு வசுவானவ
ரிலங்கிய மருத்துவர் தினந்தனி புரக்கவே. 10

## 2. செங்கீரைப் பருவம்

11. ஆறுசம யத்தவர்கள் வழிபாடு செய்வதற்
காறுபொரு ளாகமேவி
யவரவர் செயுஞ்செயலை யேற்பனென வறிவிக்க
ஆறுதிரு வதனமேவிப்

பேறுபெறுமச்சமய நச்சுமவ ரிச்சையுறு
பெத்தமுத் திகளையெல்லாம்
பிறழாம லிவனென வறிவிக்க வீராறு
பேதமில் கரங்கள்மேவி
ஊறுதவிர் பலகோடி சடசித் தினுக்கெலாம்
உயிராக மேவுமுதல்வன்
ஒருவனும் என்றுதெரி விப்பதற் கொப்பிலழ
கொழுகுதிரு மேனியொன்ருய்த்
தேறுபுக ழுடன்வந்த மன்னுகீழ் வேளூர
செங்கீரை யாடியருளே
சிங்கார வேன்முருக சங்காழி மான்மருக
செங்கீரை யாடியருளே. 1

12. தத்துதிரை முத்தமுமிழ் சீகரச் சாகரத்
தரணியிடை வாழுமுயிர்கள்
சந்ததமு முந்துதுய ரந்தனி லழுந்தாது
தக்கமுறை நன்மைபெறவே
புத்தியொடு முத்திதரு புண்ணியமு நண்ணிய
புலன்கணுக ரின்பமதுவும்
பொற்புற வவற்றிடை விளங்கியனு தினமும்மெய்ப்
புகழ்பெற விருந்தபொருள்போல்
நித்தநிறை வுற்றபர ஞானிசுக மானசிவ
நின்மலனு மதுரவசன
நீலமா துமையு மோகைபெற விவர்நடுவ
ணேயமொடு வீற்றிருந்த
சித்திபெறு முத்தமர்கள் மன்னுகீழ் வேளூர
செங்கீரை யாடியருளே
சிங்கார வேன்முருக சங்காழி மான்மருக
செங்கீரை யாடியருளே. 2

13. துள்ளுந் தகட்டகட் டிளவாளை விரிபாளை
துன்றுகமு கூடுதாவித்
துப்புறழ் பழக்குலை யுதிர்த்தயல் வருக்கைகொள்
சுளைக்கனிகள் சாடிவெடிபோய்
அள்ளுங் கவின்படைத் திலகுகற் பகத்தருவின்
அம்பொன்மலர் மாரிசிந்தி

அந்தர நிரந்து வருகந்தர மதிர்ந்திட
வணங்குவிசை யோடுமோதித்
தள்ளும் பெற்றுரை வழியூடு புவிவந்து
சங்கமலி வாவிமேவித்
தாமரை மலர்த்திரளு மூக்கிவிரி தேனுண்டு
சந்ததமும் வந்துலாவும்
தெள்ளும் புனற்பழன மன்னுகீழ் வேளூர
செங்கீரை யாடியருளே
சிங்கார வேன்முருக சங்காழி மான்மருக
செங்கீரை யாடியருளே. 3

14. அங்கணமு தொழுகுகலை யெழுமதியம் வேணியணி
ஐந்துமுக முள்ளபரமன்
ஆறுமுக னெனவந்த வுண்மையினை யறியாத
அம்புய மலர்த்தவிசினோன்
பங்கமறு தாரகப் பொருள்கூறு நெறிதவறு
பட்டவல மேவினனைப்
பழுதகல மறையினுரை முழுதுமுண ரத்தவசு
பண்ணுது மெனத்தேறியே
துங்கமுறு மப்பிரம னுவினுறை கலைமாது
தூயதட மலர்மேவல்போற்
றுப்புநிகர் செஞ்சரண வமுதநிற வாடகத்
தூவியிள வரசவன்னஞ்
செங்கமல மலர்மீது மன்னுகீழ் வேளூர
செங்கீரை யாடியருளே
சிங்கார வேன்முருக சங்காழி மான்மருக
செங்கீரை யாடியருளே. 4

15. சுத்தமார் வெண்படிக மாசற வரிந்துபுரி
தூநிலா முற்றமீது
சோதிமர கதசிகரம் வீசுபா சொளியுமளி
சூழுமென் பந்தர்முல்லைப்
பத்திசேர் முகையொளியு மாதரணி கலனிலவு
பற்பராகத் திஞெளியும்
பாயவிது பாசடையு முத்துமம் புயமுநிறை
பைந்தட மெனப்பேதைமார்

புத்தியார் வத்திஞெடு மூழ்கவரு போதிளைஞர்
புனலாழு மதுகொங்கைபொற்
குடங்கொண்டு நீந்திடு மென்னநாணி மகிழ்
புரிசெழும் பதரிவனம்வாழ்
சித்திரகூடப் பரமர் புத்திரவே தத்தலைவ
செங்கீரை யாடியருளே
சிங்கார வேன்முருக சங்காழி மான்மருக
செங்கீரை யாடியருளே. 5

வேறு

16. நித்தன் மலைக்கொடி கண்கள் களித்திட
நீள்கதிர் தவழ்வதுபோல்
நிரைமணி முன்றி லின்வந்து தவழ்ந்து
நிமிர்ந்து சுரர்க்கெனவே
வைத்த சுவர்க்க முதற்பல பூமிகண்
மாதவ மாதிசெய்
மன்னிய பூமிக ளலவெனல் போலொளிர்
மதிநிகர் முகமசையச்
சித்தி தருஞ்சிவ பூசை தவம்புகழ்
சீர்பெறு வேள்வியெலாம்
செய்து பலன்பெறு தலமிது வெனுநெறி
செப்புதல் போல்மலர்
அத்த நிலத்தினில் வைத்து மகிழ்ந்தினி
தாடுக செங்கீரை
அதிக வளத்துறை பதரி வனக்குக
ஞடுக செங்கீரை. 6

17. மணிகிளர் குஞ்சி முடித்திடு முச்சியின்
வச்சிர வொளியாட
மாசறு தேசுறு முத்தியல் சுட்டிநன்
மதியுடு வெனவாடக்
கணிதமி லொளிதரு குண்டல மாறிரு
கதிரவர் போலாடக்
கண்ட சரத்தொடு மண்டிய வெழில்வளர்
கண்டிகை களுமாடப்

பணிதரு மரதனம் விரவிய கரவளே
பலபல விதமாடப்
பயில்மர கதமிடை யுறுமரை வடமிசை
பகர்கிண் கிணியாட
அணிகிளர் பரிபுர மாட வசைந்தினி
தாடுக செங்கீரை
அதிக வளத்துறை பதரி வனக்குக
ஞடுக செங்கீரை. 7

18. முகநிறை கலைமதி போலொளி தந்திட
முகிணகை நிலவூர
முழுமதி கண்டலர் குமுத மெனப்பொலி
மொய்யொளி வாய்மலர
திகழ முதனைய செவ்வாயூ றியகமழ்
தேறல் வழிந்தொழுகச்
சிற்பரை விழியிணை யான சரந்தெ
ரிவரு மகிழ்கூரப்
புகல்மணி நிலவிய குழையணி காதினை
புயமிசை நின்றுடப்
புத்த முதச்சிறு குடநிகர் பண்டி
பொலிந்து குழைந்தசைய
அகமகிழ் சுந்தர மேனி குலுங்கிட
ஆடுக செங்கீரை
அதிக வளத்துறை பதரி வனக்குக
ஞடுக செங்கீரை. 8

வேறு

19. பொருந்திமை யத்துமை கலியா
ணங்காணுந் தேவர்
புகழ்ந்த தவத்தினர் புவியோர்
வந்தியா வருங்கூடி
நெருங்கிட வுத்தர திசைதா
ழுஞ்சீர்கண் டீசர்
நிலஞ்சம முற்றிட முனிநீ
சென்றே தென்பூமி

வரும்பொதி யத்துறை யெனநா
தன்பாதப் போதை
வணங்கி யுரைத்தமிழ் மலைமே
லன்றூர் வஞ்சேர
இருந்த வனுக்கருள் குமரா
செங்கோ செங்கீரை
இலந்தை வனத்திரு முருகா
செங்கோ செங்கீரை. 9

20. நலங்கொள் மறைக்கொரு முதல்வா
கங்காளன் பாகம்
நயந்த மலைக்கொடி புதல்வா
கந்தா செந்தூரா
குலங்கொள் சுரர்க்குள மிசையார்
சந்தாபந் தீரக்
குலுங்கு புனற்சர வணமேல்
வந்தாயின் பான
துலங்கு தவத்துறை முனிவோ
ரெந்தா யென்றேது
சுகந்தம் விரித்தலர் தொடைசேர்
மொய்ம்பா சிங்கார
மிலங்கு மயிற்படை யொருவா
செங்கோ செங்கீரை
இலந்தை வனத்துறை முருகா
செங்கோ செங்கீரை. 10

## 3 தாலப்பருவம்

21. மின்னுக் கொடிபோல் மயிலினம்போல் மிழற்றுந்
தீஞ்சொற் குயிலினம்போல்
விரைக்கற் பகப்பூங் கொம்பினம்போல் விளங்கும்
கனக மாலிகைபோற்
கன்னற் சிலைவேள் பெருமிதம்போற் கதிர்மா
மணிபோல் விளக்கொளிபோல்
.....................................................
....................................

அன்னப் பெடைபோல் மானினம்போல் அவனி
படைத்த பெருநிதிபோல்
அழகு பழுத்த கொழுங்கனி போலணி
மாளிகையின் மடமாதர்
மன்னிப் பயிலும் இலந்தை வனவாழ்வே
தாலோ தாலேலோ
மயில்மா முருகா மகபதிக்கு மருகா
தாலோ தாலேலோ.

22. முதிர்தேன் றுளிக்கு நறையாம்பல் முறுக்கு
நெகிழ்ந்து முகமலர
முற்று மெழிற்சந் திரகாந்த முழுமா
ளிகைதன் புனல்கொழிப்பக்
கதிர்மா மணிநீ டரமியமேற் கணவர்
புயமங் கையர்திளைப்பக்
கருதும் சகோரம கிழ்துங்கக் கதிரோன்
இரவோ வென்றயிர்ப்ப
..............................................
..............................
அம்பொற் புரிசை யிடந்தோறு மார
முயிர்த்துச் சகுகினங்கள்
மதிபோ னிலவு மிலந்தைவன வாழ்வே
தாலோ தாலேலோ
மயின்மா முருகா மகபதிக்கு மருகா
தாலோ தாலேலோ.

23. ஓலச் சிவைண் டினம்பெடையோ டுதிக்குஞ்
சிறுகா லையிற்கமலத்
தூறும் பசுந்தேன் பருகிமண முயிர்த்துக்
கனகத் தாதூதிக்
கோலப் பொழிலிற் கணிகையர்தங் கூர்வேல்
விழிபோலு லவியுச்சி
குறுகிக் கதிரோன் கதிரொளிக் குளிர்நித்
திலம்வெண் டிரைகொழிக்கும்
மேலக் கடலிற் புகுவதன்முன் விரைந்தும்
மதுரக் காமரப்பண்

மிழற்றி யமுத கிரணன்வர விரியு
நறைப்பூங் குமுதமிசை
மாலை பயிலு மிலந்தைவன வாழ்வே
தாலோ தாலேலோ
மயின்மா முருகா மகபதிக்கு மருகா
தாலோ தாலேலோ. 3

24. கிளரும் பசுந்தோட் டிளந்துளபக் கேழா
ரலங்கற் சுருளோதிக்
கெண்டை நெடுங்கட் செந்துவர்வாய்க் கிளிக்கும்
பணைப்பூண் முலைசுமந்து
தளருஞ் சிறிய விழைமருங்குற் றண்ணங்
கமலத் திருமாதைத்
தழுவி மகிழு மொருமாமன் றன்பே
ருவகை மீதூர
ஒளிருங் கனகத் தாலியற்றி யொன்பான்
மணியிற் குயிற்றிமுழு
துல்கம் புகழக் கொணர்ந்தவெழி லோங்கு
மணிப்பூந் தொட்டிலிடை
வளருங் குமரா விலந்தைவன வாழ்வே
தாலோ தாலேலோ
மயின்மா முருகா மகபதிக்கு மருகா
தாலோ தாலேலோ. 4

25. தக்க நவவீரர் கடாயர் தருண
வருணச் சுடர்படலை
தழைக்கு நவமா மணித்தொகுதித் தகுதி
விளங்குந் தொட்டிலிரு
பக்க மருவி நின்றூட்டும் பருவத்
திமையப் பாவையுடன்
பரம னவர்க் கண்டைத் தெனத்தாம்பைம்
பொற்றுகிலாற் றெட்டிலிணை
மிக்க வகையாற் புறம்பொதிய விமலன்
நகைக்க வார்ங்கவர்கள்
வெள்கி வறிதே நிற்பவுமை விரும்பி
எடுத்து மடித்தலமேல்

வைக்த மகிழும் இலங்தைவன வாழ்வே
தாலோ தாலேலோ
மயின்மா மருகா மகபதிக்கு மருகா
தாலோ தாலேலோ. 5

வேறு

26. வளமை தழைத்திடு சரவண வாவியில்
வளருஞ் சிறுமகவே
மன்னிய வாரல் மடந்தையர் பூண்முலை
வருபா னுகா வோனே
இளமை மயிற்புற மகிழ்கதிர் ஞாயி
றெனதிகழ் மேனியனே
எங்கு நிறைந்த சுகக்கட லாகி
யெனிதயத் துறைபவனே
களப மிகுத்தலர் புளக முலைக்கன
கவுரிகண் ணொளிர் மணியே
கறுவு சமர்த்தொழில் நிறுவிய வீரக்
காளைய ராதிபனே
தளவ மணத்திடு பதரி வனத்திறை
தாலோ தாலேலோ
சங்கரர் தந்தருள் கந்த துரந்தர
தாலோ தாலேலோ. 6

27. திங்கள் முகத்திரு வாணி புலோமசை
சீர்பெற வந்தவனே
தெய்வ நதிப்ப கிரதி மலரங்கை
செழிக்க வளர்ந்தவனே
துங்க மறைப்பிர மாவை வினவிய
தொன்மனு வாசகனே
சூழ்தரும் வானவ ரியாவரும் வந்து
தொழும்பத பங்கயனே
இங்கித வங்கிய மங்கல கீத
மியம்பிய மான்மகளார்
ஏர்பெற முன்புசெய் மாதவ நாடி
யெழுந்தரு ளும்பொருளே

சங்க மொலித்துறை பதரி வனத்திறை
தாலோ தாலேலோ
சங்கரர் தந்தருள் கந்த துரந்தர
தாலோ தாலேலோ. 7

28. அண்டரை முன்னம் வெகுண்ட பெருந்திற
லதிசூ ரொருமாவை
அலைவாய் விரைவாய் விழநீ டியகதி
ரடல்வேல் விடுவோனே
தொண்டரை யென்றும் விடாதிக பரமுறு
சுகநுகர் வித்துமெனத்
தோன்ற பயத்தொடு வரத நிலாவிய
தொடியணி செங்கையனே
கொண்ட லெனச்செறி பாசடை யுந்திகழ்
குளிர்தா ரகையென்மேற்
குலவிய புதுமல ரும்பெய லெனவரு
கொழுவிய தேனுநிறை
தண்டலை மண்டிய பதரி வனத்திறை
தாலோ தாலேலோ
சங்கரர் தந்தருள் கந்த துரந்தர
தாலோ தாலேலோ. 8

(சந்தவிருத்தம்)

29. காதார் தோயார் பாலா லோலா கோமானே
காவே தாவே யாருமூ ரா சீராளா
மாதா வேபோ ஞயே ஞழா தாள்வோனே
வானோர் வாழ்வே ஞானு காரா தேசானே
வேதா தாலோ தாலே லோகீழ் வேளூர்வாழ்
சேயே தாலோ தாலேலோ தாலோ, தாலேலோ. 9

30. வேயூ தோர்மால் நேயா தாலோ தாலேலோ
வேளே தார்சேர் தோளா தாலே தாலேலோ
தீயூர் சூர்போ ரேறே தாலோ தாலேலோ
சேனு பாரா வோரார் தாலோ தாலேலோ

மாயூ ராபா வாணு தாலோ தாலேலோ
மாயா வீடே யீவாய் தாலோ தாலேலோ
கேயூ ராமா சீரா தாலோ தாலேலோ
கீழ்வே ளூர்வாழ் சேயே தாலோ தாலேலோ. 10

## 4. சப்பாணிப் பருவம்

31. சேரும்விட் புலமுகடு தொடுகுடுமி நிலவுபொற்
சிகரமலி பலமாமணிச்
சித்திரப் பத்திதிகழ் அபரிமிதக் கோமளச்
செல்வநிறை மாளிகைதொறும்
காருமெச் சியகருங் கூந்தற் பொறைக்கிணைக்
கனமுலைக் கொசிமருங்குற்
கன்னிமங் கையர்முன் றி லிடைவைத்து வளர்கின்ற
கார்முல்லை மென்கொடியினுக்
காருநற் கொழுகொம்பு நாட்டல்கண் டன்னையர்கள்
அகமகிழ்ந் தருமணஞ்செய்
ஆசையறி வித்தனர்க ளென்றளவில் வளனெடுகல்
யாணஞ்செய் கோலமெங்குஞ்
சாருநற் பதரிவன மேவுசிற் பரகுமர
சப்பாணி கொட்டியருளே
சனகமுனி முதன்முனிவர் பரவுதிரு முருகவொரு
சப்பாணி கொட்டியருளே. 1

32. பெருமைபெறு வெண்டிரைச் சீகரச் சாகரப்
பேர்பெற்ற வேழாடையும
பிதிராது தற்றுற்ற வொருமா நிலக்குமரி
பெறுமா ருயிர்த்தொகையெலாம்
ஒருமையுட னெஞ்சத்து வஞ்சப் பிணக்கறுத்
துள்ளூறி யள்ளூறுநல்
லுரைகொண்டு நின்றிரு வெழுத்தையும் வழுத்திநய
முயர்ஞான வேடமணியில்
அருமையுறு மின்பருளி யபிமான மதிமோகம்
அச்சமறி யாண்மையின்னல்
ஆசைமத மாற்சரியம் வெகுளி முதலணுகா
தகற்றுவிப் பதுங்கிர்ப்பத்

தருமமிகு பதரிவன மருவுசிற் பரகுமர
சப்பாணி கொட்டியருளே
சனகமுனி முதன்முனிவர் பரவுதிரு முருகவொரு
சப்பாணி கொட்டியருளே. 2

33. தேனணைசெய் கேசரத் தேடுவிரி நாண்மலர்
தெங்கொத் திலாதுகாய்க்குஞ்
செய்யவட தாருவிற் றுய்யபா சிலையெனத்
திகழு மொருபாயவன்
ஊனமற்று செங்கமல மங்கையொடு துயில்கூரும்
ஓங்குவண மூருமாலோன்
உந்தித் தலக்கமல முந்திப் பயந்ததிசை
உயர்நான் முகத்துமதுரப்
பானன்மொழி வாணிபதி வேதத்தி னுதிப்
பழம்பொருள் சொலாதமிகையாற்
பசியகுடு மித்தலை குலுங்கப் புடைத்தசெம்
பதுமத் திருக்கரத்தால்
தானமலி பதரிவன வேலசிற் பரகுமர
சப்பாணி கொட்டியருளே
சனகமுனி முதன்முனிவர் பரவுதிரு முருகவொரு
சப்பாணி கொட்டியருளே. 3

34. விழைவுறச் சந்தனக் காடுமலி மலயமலை
வீற்றினி திருக்குமோலி
வேணிப் பசுந்தமிழ் செங்நாப் பெருந்தவ
விதிக்குறு முனிக்கருளுவோய்
குழையுமுத்த மநேச வடியருள மகலாது
குடிகொண்ட பாதவனசங்
கோமளப் பாகர்புய வரைமிசைப் பூப்பவளர்
குழகவழ கொழுகும்வடிவா
கழையுநெற் பயிருமங் தாரமுஞ் சாதியுங்
கமுகுமா லுங்கதலியுங்
கன்னி காரங்களும் புன்னையுஞ் சண்பகக்
காவுமா வும்பனசமுங்
தழையுநற் பதரிவன மருவுசிற் பரகுமர
சப்பாணி கொட்டியருளே

சனகமுனி முதன்முனிவர் பரவுதிரு முருகவொரு
சப்பாணி கொட்டியருளே. 4

35. காதிலிடு வச்சிரக் குண்டலமு நெற்றியிற்
கவினொழுகு பொற்சுட்டியுங்
கரியகவூ சியின்வாய்ந்த முச்சியிற் சுற்றிவிடு
கதிர்முத்த மிளிர்தொங்கலுஞ்
சோதிமய மானதிரு மார்பிற் கிசைந்திலகு
தூரமணிப் பொன்னுரமுந்
தோளிலணி பன்மணிக் கேயூர முஞ்சிறிய
தொந்திசரி யரைநாணுடன்
சீதமுறு நாதமுரல் கிண்கிணித் தொகுதியுஞ்
செந்தளி ரினுஞ்சிவந்த
சீறடித் துணையிலணி செம்பொற் சதங்கையும்
செய்யநூ புரமுமசையத்
தாதுகமழ் பதரிவன ஙிதசிற் பரகுமர
சப்பாணி கொட்டியருளே
சனகமுனி முதன்முனிவர் பரவுதிரு முருகவொரு
சப்பாணி கொட்டியருளே. 5

வேறு

36. தத்து திரைக்கட லுத்தர திக்கமர்
சமரத் தரிமுகவன்
தானையு மானமு மீன முறும்படி
சங்கிராமத் தொழில்செயும்
உத்தம மெத்திய பூத கணதிபர்
உயர்வீ ரரையேவி
ஓங்கி ரதத்தை நடத்தி யெதிர்த்தவன்
ஓரா யிரமுடியும்
பத்திகொள் கைத்தல மீரா யிரமும்
படவடு கணைவிட்டப்
பற்றல னுயிருண வச்சிர முய்த்தருள்
பதுமச் செங்கையினாற்
கொத்துறு வெட்சி மலர்த்தொடை வேலவ
கொட்டுக சப்பாணி

கொற்றவ பதரி வனத்துறை சண்முக
கொட்டுக சப்பாணி. 6

37. இலகு மணிச்சுடி கைப்பணி யரசுடல்
எங்கும்வெ யர்த்தோட
எட்டர வுட்க நடுங்கி மதக்கரி
எட்டும்வென் னிட்டதிர
நிலவு திசைக்கிரி பம்பர மொத்துயர்
நிலமிசை நின்றுரட்
நேமிப் பெருவரை சுழலக் கதிர்மதி
நெளியக் கடல்சுவறச்
சுலவு முகிற்பட லத்தொடு மண்டச்
சுவர்பிதி ருற்றுதிரத்
தோன்ற வுணக்குலம் வேரற நீடிய
சோதி மணிக்கலபங்
குலவு மயிற்பரி நடவு திறற்குக
கொட்டுக சப்பாணி
கொற்றவ பதரி வனத்துறை சண்முக
கொட்டுக சப்பாணி. 7

38. சீதக் களப வுலாசப் புளகித
செப்பு முலைத்திருவும்
செந்தமி ழுந்திகழ் நன்கலை யுந்தரு
சீருறு பாரதியும்
ஓதக் கடல முதுரையிற் குணவற்
குதவு புலோமசையும்
உள்ள முவந்து வகைக்கட லாடவிண்
உம்பர்கள் குடியேற
ஆதிக் கத்துட னண்டத்தொ குதியின்
ஆணை செலுத்திமனத்
தச்ச மினிச்சய வச்சிர மிடலுடல்
அச்சூ ரரமுருவ
கோதைச் சுடர்வடி வேலைத் தொட்டவ
கொட்டுக சப்பாணி
கொற்றவ பதரி வனத்துறை சண்முக
கொட்டுக சப்பாணி. 8

LIBRARY
MADRAS-25.

### வேறு

39. குறைவறு மதுரம் விளக்கிய
சொற்கிளி யொப்பான
குறமகள் புளக முலைத்துணை
யிற்கள பச்சேறு
நறுமல ரணைய கரத்தினில்
அப்பி நயப்பாக
நறுமுகை விரிய மலர்த்தொடை
மைக்குழ லிற்சூடி
இறுகிடை நலியு மெனச்சொலி
மற்புய வெற்பூடுள்
இதமுற மருவிரி பனக்கிது
தக்கதெனக் கூறி
மறுவறு கலவி வளர்த்தவ
கொட்டுக சப்பாணி
வளமலி பதரி வனக்குக
கொட்டுக சப்பாணி. 9

40. துதிபெறு புலமை நிரம்பிய
மெய்ப்புகழ் நற்கீரர்
சொலுநல கவிதை திருச்செவி
வைத்த முதற்றேவ
கதிதரு கருணை பெருக்கிய
கட்புல வித்தார
களியளி முரல மதுப்பொழி
பற்ப மலர்ப்பாத
விதிமுறை யொழுகு மவர்க்கொரு
கற்பக நற்றும
விரைசெறி நறிய கடப்ப
மலர்த்தொடை யற்பாள
மதியணி அமல னளித்தவ
கொட்டுக சப்பாணி
வளமலி பதரி வனக்குக
கொட்டுக சப்பாணி. 10

## 5. முத்தப் பருவம்

41. கன்னற் சுவையும் தனிமதுரங்
கனிந்த கதலிக் கனிச்சுவையும்
கனகப் பொகுட்டுச் சிவந்தவிதழ்க்
கமலத் தெழுந்த தேன்சுவையும்
பின்னற்ற ரங்கப் பயோத தியிற்
பிறந்த அமுதத் தருஞ்சுவையும்
பிணியின் றுயர்ந்த வேய்ங்குழலிற்
பிறங்கு மிசையின் நறுஞ்சுவையும்
வன்னத் திவவு மாடகயாழ்
மன்னும் பசியநரம் பிசையின்
வாய்ந்த சுவையு மிகநாண
மருவு மழலை வார்த்தையினுல்
முன்னைப் பொருளுக் குபதேச
மொழிவாய் முத்தந் தருகவே
முருகார் தருவா ரிலந்தை
வனமுருகா முத்தந் தருகவே. 1

42. வழங்கும் பெரிய திசையினுயர்
வடவேங் கடந்தென் குமரிசுடர்
வயிரப் படையோன் திசையளக்கர்
மகர முயர்த்தோன் பெருந்திசையின்
தழங்குங் கடலென் றுரைத்த
வெல்லை தன்னின்வழங்குந் தீந்தமிழுஞ்
சகல புவனம் பொதிந்தவண்டத்
தலங்கட் குரித்தாம் வடமொழியும்
பழங்குஞ் சரவீ ரூரிபோர்த்த
பரமன் சொலுமா கமப்பொருளும்
பகர்நால் வேதப் பலபொருளும்
படிக்கும் ஏனைப் பலபொருளும்
முழங்கும் பவளத் துவர்வாயால்
முத்தந் தருக முத்தமே
முருகார் தருவா ரிலந்தைவன
முருகா முத்தந் தருகவே. 2

43. வழுவை கருமா மருப்புமுத்தும்
வஊக்கார் கமுகு கழைமுத்தும்
வனசங்கரும்பு மதிமுத்து
மாதர் மிடற்றின் வருமுத்தும்
தொழுதி யரவின் முத்தாம
சொரிமுத் தமுமீன் றலைமுத்துஞ்
சுரபி யெயிற்றி னந்தின்முத்தும்
சொல்லும் கார்நெலு டும்புமுத்தும்
விழுது படுநீர்க் குரண்ட
மிப்பிமேவு முத்தும் விலைப்பட்டு
மேனி துளையுண் டினிமையின்றி
வெளிறுங் கருவாய் முத்தமங்தோ
முழுது மினிய வுனது செவ்வாய்
முத்தந் தருக முத்தமே
முருகார் தருவா ரிலந்தைவன
முருகா முத்தந் தருகவே. 3

44. உடுவிண் டடுத்தகுவட்டிமயத்
தோங்கு மரசற் கொருமகளாம்
உரிமைப் பிராட்டி தனதுமன
முவந்து முலைப்பால் கறந்தூட்டித்
தொடுகை மனக்கு...பூசித்
தூதுவரிட் டிளவெந் நீராட்டித்
துகிலால் ஈரம் புலர்த்திமஞ்சள்
தோய்வேப் பிலைநீர் சுற்றியபின்
குடுமி திருத்தி நீறணிந்து
குலவு நிலக்காப் பணிந்துமுத்தங்
கொள்ளக் கனிவாய் முத்தமரன்
கொள்வான் குனியு மமையத்தின்
முடிகொ ணதித்தாய் முத்தமிடு
முத்தம் தருக முத்தமே
முருகார் தருவா ரிலந்தைவன
முருகா முத்தந் தருகவே. 4

45. கத்துந் தரங்க மணிகொழிக்குங்
கடல்சூ முலகும் வானுலகுங்

கதிர்வெங் குலிசத் தவன்முதலோர்
காணி களுமாங் திசைகளொரு
பத்துங் கலங்க வரும்புரத்தைப்
பலிசெய் நகையின் வெம்மையுந்தண்
பனியைத் துரக்குங் கடுங்கிரணப்
பகலோ னெனும்கண் வெம்மையுஞ்சீர்
மெய்த்தும் பகழி மதனுடலம்
வெதும்பப் பொடித்த திருநுதலின்
விழிவெம் மையுந்தீர்ந் த.ன்மேனி
மிகவும் குளிர்ந்து புளகமெழ
முத்தங் கொடுக்கும் கனிவாயால்
முத்தம் தருக முத்தமே
முருகார் தருவா ரிலந்தைவன
முருகா முத்தந் தருகவே. 5

46. குடமானு மடிசுரந் தான்கன்றை யுன்னமென்
குவிமுலை சொரிந்தபாலுங்
கொள்ளுநகை மனமிசைக் கற்பலகு சிற்றிடைக்
கொங்கையிடை மாதர்பகரும்
இடமீது சிந்துவெண் டயிருநறு நெய்யுமயல்
ஏர்வளமை மள்ளர்தத்தம்
இனியமட மாதர்மொழி யொப்பென்ற குறைதவிர
எந்திரத் தனியாலையிட்
டடல்போல வாட்டுபைங் கன்னலின் சாறுநறை
அம்புய மலர்த்தேறலும்
அலைமோது நதிகால்கள் குளமேவு நீருநிறை
வாயுவரி யொன்றலாகக்
கடலாறு மெனமன்னு பதரிவனம் வருமுருக
கனிவாயின் முத்தமருளே
கனகாசலப் பெணரு ளனகா சிலைக்குமர
கனிவாயின் முத்தமருளே. 6

47. பாரவர் மதிக்குமண வாரநிறை முலையினுற்
பண்புறு குறிஞ்சிநிலனும்
பன்னுகளி வண்டரிசை பாடியுழை தோன்றியமர்
பைங்குழலின் முல்லைநிலனும்

வாரநிகழ் வஞ்சியுறு காஞ்சிமிசை மன்னியெழில்
வளர்கரு நிலப்போகமார்
வளமைதர லாலிலகு மருதநில னும்பெருமை
வாய்ந்துநெடு வேலைமோதி
சாரமறு நிலத்தை யுற்றவிழி யிணையினுற்
றட்பமிகு நெய்தனிலனுஞ்
சாற்றுமொழி யால்வெய்ய பாலையும் காட்டிவரு
தையலார் விளையாடுசிங்
காரமொடு சீருமலி பதரிவனம் வருமுருக
கனிவாயின் முத்தமருளே
கனகாசலப் பெணரு ளனகா சிலைக்குமர
கனிவாயின் முத்தமருளே. 7

48. வானமுறு கின்னர முதற்பறவை யினமெலாம்
மருளுற்று நிலம்வீழவும்
வானவரு மன்னவரு மெழுதுசித் திரமென்ன
மன்னியசை வற்றமாவும்
பேனமுறு வாரிமுத லானபுனல் யாவையும்
பெற்றவொலி யற்றமையவும்
பின்னமொடு பட்டமர முந்தளிர் துதைந்தலர்
பிறங்கிமீ மிசைவளரவும்
ஈனமுறு வன்கல்லு நவநீத மாயுருகி
யிறுகா திருந்துவிடவும்
எண்ணரிய பண்ணும்ரா கமுமுருவ மானவெழில்
ஏந்திழை நலார்கள்பாடும்
கானமுறு புரிசைமலி பதரிவனம் வருமுருக
கனிவாயின் முத்தமருளே
கனகா சலப்பெணரு ளனகா சிலைக்குமர
கனிவாயின் முத்தமருளே. 8

வேறு

49. அகர வுகர வடிவ முடைய
அமலர் புதல்வ சிற்குண
அரிய பெரிய எவையும் அருள்செய்
அருளின் உருவ கற்பக

மகவி ணதிப னுரிய குமரி
மகிழு மினிய பொற்புய
மறவர் சிறுமி மழலை மதுர
வசன முரைசெய் விற்பன
சகல புவன சமுக தலைவ
சதுர மறையி னுத்தம
சரவ ணபவ நிலவு குலவு
சடிலர் விழியி னுற்பவ
முகர மருவு பதரி வனசண்
முகவ தருக முத்தமே
முதிரு மமுத மதிய வதன
முருக தருக முத்தமே. 9

50. பரவு மடிய ரிதய தவள
பதும மலர நற்பொருள்
பயிலு மொருமை மொழியை யருள்செய்
பரம குரவ நித்திய
இரவு விடிய நெடிய குரல்செய்
திலகு பெரிய குக்குட
இணையி லரவு முறிய விடறி
யகலு மயிலி னிச்சைய
குரவுவினிய நறிய தெரியல்
குலவு மரும பற்பல
கொடையு மணமு மதிக விசைய
குணமு முயர வைத்தமும்
முரச மொலிசெய் பதரி வனசண்
முகவ தருக முத்தமே
முதிரு மமுத மதிய வதன
முருக தருக முத்தமே. 10

## 6. வருகைப் பருவம்

51. சீலமெச் சியதவம் புரிபரா சரனுதவு
சிறுவர்முன் செய்தபிழையாற்
செய்யமன மச்சமுற மச்சமா குதிரெனச்
செப்புசா பத்தைநீக்கிக்

காலமைப் புயலுலவு தென்பரங் குன்றினவர்
கருமமல மாயைதவிராக்
கண்ணருள்செய் தெண்ணரிய சிவஞான நல்கிவரு
கற்பனை கடந்தமுத்தி
சாலவுற் றகலாமல் வைத்தகுரு பரனெனச்
சாற்றியுள நெக்குருகியே
தளராம லநுதினமும் வழிபடும் பேரன்பர்
தங்களுக் கெல்லாமநு
கூலமெய்ப் பதரிவன வாலசுப் பிரமணிய
கோதைவே லவன்வருகவே
கொக்கிறகொ டக்கணியு நக்கனரு ளுக்கிரசேய்
குக்குடது வசன்வருகவே. 1

52. சேடனைப் பொருவுவலி யுள்ளபண மணியொளிறு
தேசுவா சுகிநாணினைச்
செந்தம னியச்சிகர முந்துமந் தரமெனுந்
திகழ்மத்தின் மீதுகொளுவி
நீடலைத் திரள்குலவு பாற்கடலை மாற்கடவுள்
நீளமரர் ஞெலியமலியு
நித்தவமு தத்தினுற் பத்தியுற் றதிசீத
நிழலின்முத் தாபமாற்றிச்
சூடகக் கமலமல ரங்கையர் மங்கையர்கள்
சுரர்முனிவர் புகழநாளுந்
துகளற்ற வமுதமய மானகனி நனிதந்து
தூயதிசை யெட்டுமெட்டுங்
கோடரப் பதரிவன வாலசுப் பிரமணிய
கோதைவே லவன்வருகவே
கொக்கிறகொ டக்கணியு நக்கனரு ளுக்கிரசேய்
குக்குடது வசன்வருகவே. 2

53. கோடுமுத் துமிழ்வனச வாவியிற் சினவாளை
குதிகொண்டு முதிர்வாழையின்
குலைசாடி நெடுநாளி கேரத் தனிக்கனிக்
குலையுதிர்த் தினியபனச
நீடுமுட் குடமனைய பழமுடைய விடறிமடல்
நிலவுகமு கலையமோதி

நீனிறப் புயல்வயிறு குழையமழை பொழியும்வகை
நெடிதோடி யும்பர்தருவின்
ஊடுபொற் பொடிசிதறு நறுமலரி னறவூற்றின்
ஒழுகுபே ரருவியுடனே
உயர்நிலையி னின்றுவந் துழுதவய னிறைபுனலின்
உற்றதன் கிளையினோடு
கூடுநற் பதரிவன வாலசுப் பிரமணிய
கோதைவே லவன்வருகவே
கொக்கிறகொ டக்கணியு நக்கனரு ளுக்கிரசேய்
குக்குடது வசன் வருகவே. 3

54. நாமகட் செல்வியுறை தாமரைப் பீடிகையை
நான்முகக் கடவுளேக்கி
நங்கையிலு றைதியே விடுபெயரு ரூடியென
நாடிமுடி யாதவன்பாற்
தேர்மறைத் தொகுதிவிரி வாய்மலர்த் தவிசிடை
திருந்துபு பொருந்தவைத்துத்
திசைமுழுது மிசைநிறுவி முற்செய்கை தவறுது
சீர்பெற விருக்குஞான்று
தோமறச் செய்மிட்டி யொன்றனந் தம்பலன்
துன்னவருட லம்யாதெனச்
சொலபுல கனுரை கொண்டுவந் தந்தமுறை
தூயபர மேட்டியாகுங்
கோமளப் பதரிவன வாலசுப் பிரமணிய
கோதைவே லவன்வருகவே
கொக்கிற கொடக்கணியு நக்கனரு ளுக்கிரசேய்
குக்குடது வசன்வருகவே. 4

55. மீபுரக் குலமேழு மணவுசெம் பொன்மணி
விளிம்புறு பளிங்குமாட
மீதுமுத் தம்பவளம் வச்சிரம்கோ மேதகம்
விரவுசெய் குன்றின்மீது
நூபுரச் செஞ்சரண மங்கையர்கள் வண்டலி
னுவன்றமென் குதலையின்சொல்
நுதியவளை வாய்ப்பசுங் கிள்ளைகள் பயின்றினிது
நுவலுவது கண்டேபிர

மாபுரத் துறைகின்ற செஞ்சூட்டு வண்சிறை
மணித்துவர் நிகர்த்தபைந்தாள்
வாலவோ திம்மவர்க ணடைகற்ப மனமுன்னி
வந்துவதி யும்பெருமைசேர்
கோபுரப் பதரிவன வாலசுப் பிரமணிய
கோதைவே லவன்வருகவே
கொக்கிற கொடக்கணியு நக்கனரு ளுக்கிரசேய்
குக்குடது வசன்வருகவே. 5

வேறு

56. குயில்போன் மிழற்றுஞ் செந்துவர்வாய்க்
குறத்தி கனத்த குங்குமப்பூண்
கொங்கைக் களிற்றைக் கண்டுமனங்
குழைந்து விழைந்து குறையிரந்து
பயில்வா னமுதே பசுங்கிளியே
பாவாய் காவா யென்றவடன்
பௗத் துவர்வா யமுதருந்தி
பணைத்தோள் புடைத்துக் கூத்தாட
மயிலார் சாய னேக்கிமன
மகிழ்ந்து நாணி முகங்கோட்ட
வருபுன் முறுவ னிலவினுக்கு
வனச மலர்வார்ண் முகமலரும்
அயில்வே லவனே யாறுமுகத்
தமுதே வருக வருகவே
அத்திக் கிளையா யிலந்தைவனத்
தரசே வருக வருகவே 6

57. கொண்ட கணவர் புறத்தொழுக்காற்
கொதித்த மடவார் புலந்துகுத்த
குளிர்முத்தமு நிற்றெழ மிடைந்த
கொற்ற வரசர் முடிகணெருக்
குண்ட வதனு லுதிர்மணியும்
ஒண்டீந் தமிழ்ச்சொற் பாவலருக்
குதவும் பரிசி லாங்கவர்கொண்
டொழிந்து கிடந்த வொளிமனவும்

வண்டு படியுங் குழன்மாதர்
வண்ட லிழைத்த வரதனமும்
மருவி நடப்போர் தமைவருத்தும்
வழியன் றிதுபூ மலிவழிகாண்
அண்டர் மகுட முரிஞ்சுபதத்
தமுதே வருக வருகவே
அத்திக் கிளையா யிலந்தைவனத்
தரசே வருக வருகவே. 7

58. வீறு மதத்துக் கருங்களமர்
விரைந்து குழுமி நாட்பார்த்து
விளையும் புலத்துக் கரும்பகட்டேர்
மிகுப்பா ருழுவார் விதைதெளிப்பார்
நாறு பறிப்பார் சேறமைப்பார்
நடுவார் கருவார் எருவிடுவார்
நாடி யெழுந்த களைகளைவார்
நறுநீர் யாப்பார் பயிர்காப்பார்
தேறு கதிர்நெ லரியாப்பார்
சேர்த்த சூடு பிரித்தடிப்பார்
செந்நெற் குவிப்பார் மனையிடத்திற்
சேர்ப்பா ராகச் செழும்பொன்னி
ஆறு பெருக்காய் வரும்புனனாட்
டமுதே வருக வருகவே
அத்திக் கிளையா யிலந்தைவனத்
தரசே வருக வருகவே. 8

வேறு

59. பயிலு மெழிலி பிழையை யொருவு
பரிவு புரியு மொருவனே
பரம ரரவ சயனர் பிரமர்
பதியின் அதிக பதியனே
மயிலும் வலிய களிறு நடவி
மலையின் உலவு மரசனே
வளவர் குலமும் வழுதி குலமும்
வளர வுரைசெய் தமிழனே

அயிலு மழுவு மதியு முதல
வணிப னிருகை முதல்வனே
அறிவு நிதியும் வயது மழகு
மருளு முருக விசையெலாங்
குயில்சொல் பதரி யடவி மருவு
குழகன் வருக வருகவே
குறவர் வனிதை தழுவு கொழுந
குமரன் வருக வருகவே. 9

60. அலகில் கலைக ளகில மருள்செய்
அமலன் வருக வருகவே
அமரர் பணிய நிலைமை யுதவும்
அபயன் வருக வருகவே
கலப மயிலி னிலகு சரண
கமலன் வருக வருகவே
கருணை பெருகு நயன மினிய
கடவுள் வருக வருகவே
நிலவு பொதிய முனிவர் பரவு
நியமன் வருக வருகவே
நெடிய கயிலை யசலர் பெறுநன்
னிதியன் வருக வருகவே
குலவு பதரி யடவி மருவு
குழகன் வருக வருகவே
குறவர் வனிதை தழுவு கொழுந
குமரன் வருக வருகவே. 10

## 7. அம்புலிப் பருவம்

61. தமரமா ரலைவாயின் வந்துசூர்க் கிளையெலாஞ்
சாரமிர்த நல்குமதனாற்
சசியென்று நலமேவ வருமானை மன்னியுயர்
தன்மையா லெந்தநாளுந்
திமிரமு டிராவேலை யொளியினொ டுமெய்திச்
செழுங்குமுத மலரவரலாற்
செப்பமுட னுத்தரந் தங்குமா திரமான
சீருற்ற தன்மையதனால்

விமலமார் காயத்தை யுற்றிருந் தாபத்தை
மேவாது செய்யுமதனுல்
வேதமுத லானவிவ னின்னையொப் பானிவனே
மேவிவிளை யாடலினிதால்
அமரர்சே னுதிபதி பதரிகா னன்குகனே
டம்புலீ யாடவாவே
அம்புயா சனர்பரவு நம்பனுர் புதல்வனுடன்
அம்புலீ யாடவாவே. 1

62. மேனுளி லும்பர்தினம் வெம்பிய சிறைப்பிணியை
விடுவித்தவ் வும்பர்தத்தம்
மெல்லியனல் லார்களித ழமுதும்வா ரிதியமிழ்து
மிகுமுவகை யமுதோடுண்
வானுடு குடியேற்றி வைத்ததுண் டொருபகலின்
மற்றுமுள முற்றுநவில்வாம்
வளம்வளரு மிருநிதியும் வாரிதரு வொருகடவுண்
மாமணியு முயர்சுரபியும்
தேனுத வண்டுமுரல் கின்றவைந் தருவுமுயர்
சீருமிவணடியர் வேண்டிற்
செப்புமறை மாத்திரையி னீடுழி நிற்கவருள்
செய்வனிது சரதமாமால்
ஆனுத வாழ்வுதவு பதரிகா னன்குகனே
டம்புலீ யாடவாவே
அம்புயா சனர்பரவு நம்பனுர் புதல்வனுடன்
அம்புலீ யாடவாவே. 2

63. மண்டிய முரண்டிருகு மூலவா ணவதிமிர
மாயவிரு மாயையான
மாயேந் திரசா லங்கள் பயந்தோடி
மடியவடு கருமங்களத்
துண்டமிகு கண்டமுற விச்சகப் போகங்க
டுச்சமென விச்சைமாறத்
துகளற்ற பரிசுத்த சிவசத்தி யாம்பரஞ்
சோதிமய மானவருள்கைக்
கொண்டுபொருள் கண்டினிய வுல்லாச பூரணக்
குதூகல வானந்தமாங்

குறைவற்ற செல்வமுந் தந்தருளு வானிவன்
கொள்கைநீ யுற்றறிகுவாய்
அண்டபகி ரண்டமுயர் பதரிகா னன்குகனே
டம்புலீ யாடவாவே
அம்புயா |சனர்பரவு நம்பனுர் புதல்வனுடன்
அம்புலீ யாடவாவே. 6

64. வன்னவளை சூலுளைந் |தம்போ ருகத்தினுடு
வர்க்கமென முத்தமீனும்
வளமைபெறு சரவணத் தீர்த்தத் தடத்துறையின்
வந்தாடி நியமமுடனே
முன்னுகும ரேசனருள் சந்நிதியின் |வந்துகை
முகிழ்த்திசை துதித்தவெவரும்
முடியாத பெருவாழ்வு பெற்றூர்க ளிச்செய்கை
முயலுவ துனக்கருமையேல்
இன்னிழ லிலந்தையடி வலம்வருதி வரமெலாம்
ஈவனிடு கின்றதெய்வம்
இலந்தையடி யினிலுமிடு மென்றபழ மொழிகேட்ட
தில்லையோ வினியேனுநீ
அன்னநிறை வாவிசூழ் பதரிகா னன்குகனே
டம்புலீ யாடவாவே
அம்புயா சனர்பரவு நம்பனுர் புதல்வனுடன்
அம்புலீ யாடவாவே. 7

65. சிங்கா தனத்திருந் தாயிரத் தெட்டெனச்
செப்புமண் டங்களெங்குஞ்
செங்கோல் செலுத்தியமு தாசனர்கள் பணிசெயத்
திக்குவிச யஞ்செலுத்தி
மங்காத புகழ்பெற்ற சூரனிவன் மொழியின்வழி
வாராத முறைமையாலே
மறமுற்ற சதுரங்க சேனையையு மொப்பற்று
வாழ்தம்பி மார்கடமையுந்
தங்கார்வ மைந்தரையு மடல்செய்து மற்றவன்
தன்னுட லிணைப்பிளந்து
சாருமுயிர் தன்னைமயி லாக்கியதன் மீதேறு
தன்மையறி யாததன்றே

அங்காதி மறைதுதிசெய் பதரிகா னன்குகனே
டம்புலீ யாடவாவே
அம்புயா சனர்பரவு நம்பனூர் புதல்வனுடன்
அம்புலீ யாடவாவே. 8

66. உலகின்முன் தக்கனிடு சாபத்தி னுலுனக்
கொருகலையு மின்றிவெள்கி
ஒய்தல்கண் டெம்பிரா னருளினொடு சடையின்வைத்
தோங்குகலை தந்தளித்தான்
இலகுமும் மதயானை முகனைநீ நகைசெய்ய
இன்னருள் புரிந்துகாத்தான்
இரையாக வுனையரவ முண்ணுது தினமரவை
இவன்மயிற் கிரையளித்தான்
பலவித முனக்குதவி வழிவழிசெய் பான்மையைப்
பாராதிருத் தன்முறையோ
பழுதில்செய் நன்றிகொன் றார்க்கென்று மெங்கணும்
பரிகார மில்லைகண்டாய்
அலகில்நெற் கழனிசூழ் பதரிகா னன்குகனே
டம்புலீ யாடவாவே
அம்புயா சனர்பரவு நம்பனூர் புதல்வனுடன்
அம்புலீ யாடவாவே. 9

67. மதியென்று பேர்பெற்று நிறைகலையு முடையநீ
வருகரும மொன்றுமுணராய்
வாவெனப் பன்முறை யழைத்திடவும் வாராது
வலியுடையர் போலிருந்தாய்
துதிசெய்நவ வீரரு மிக்கவீ ரருமறந்
துன்னுகண நாதர்குழுவும்
துணிவினொடு வெகுளவொரு பொருளன்று நீயிவண்
தொக்ககண நிரையுளொருவா
கதியிலுனை முனிவுசெய் தொருகையை நீட்டிலக்
கைக்குநீ பற்றமாட்டாய்
காலங் கழித்தினி யிருப்பது சிறப்பன்று
காசினியி லோகையுடனே
அதிகசுந் தரமிலகு பதரிகா னன்குகனே
டம்புலீ யாடவாவே

அம்புயா சனர்பரவு நம்பனுர் புதல்வனுடன்
அம்புலீ யாடவாவே. 10

## 8 சிற்றிற் பருவம்

68. அஞ்சு முகத்தான் மகனெருவற்
காறு முகமுண் டெனஙவின்ருர்
ஐயுற் றிருந்தேம் அதைத்துணிதற்
களியேம் எண்ணிப் பார்த்தல்லால்
விஞ்சு முகத்துப் பேரெழிலின்
வெள்ளத் தெமது விழிக்கயலே
விளையாட் டயர விடுத்துமென
மிகைநீ பிடித்த தெம்விதிகாண்
வஞ்சிக் கொடியார் மறுகினிடை
மறுக வுறுக ணறிவுடையோர்
வாது புரியா ரென்றுரைத்த
மறையின் முறையு மறந்தனையோ
செஞ்சொற் புலவா வுமைபுதல்வா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சேணு ரிலந்தை வனத்தரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 1

69. ஐயர் தமக்கும் பயந்தவட்கும்
அடிகே ணினக்குங் குடியிருப்ப
தசல மெனிலெஞ் சிறுவீட்டை
யழிப்ப தழகோ வதுகிடக்கத்
துய்ய கமலப் பொற்பொகுட்டில்
தோன்று மயனைச் சிறைப்படுத்தே
தொல்லைப் பகலில் விதிமுறையே
தொலையா உயிர்க ளிதமருவ
வைய முழுதும் படைத்தளித்த
வார்த்தை வினவி மனமகிழ்ந்து
வழுத்தி யிருந்த வெமக்கிதுதான்
வழங்கும் பரிசோ பழம்பொருளே
செய்ய வழகா வருட்குழகா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே

சேணு ரிலங்கை வனத்தரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 2

70. மறையின் சிரமு மறைநவின்ற
வரதன் புயமு மிமயமலை
மன்ன னரிதிற் பெற்றெடுத்த
வல்லி யுமையாண் மணிவயிறு
மறையுங் கலவ மயின்முதுகும்
அணுகு மதனுக் கமைந்தவுன
தருமைப் பதமிவ் வாவணத்தி
னடியேம் வகுத்த சிறுவண்டல்
உறையுஞ் சிறிய புழுதிபடில்
உயர்ச்சிக் கமைந்த செயலன்றால்
உந்திக் கமலத் தயன்சிறையும்
உம்ப ருறைப்பட் டார்காதஞ்
சிறையும் தவிர்த்த சேவகனே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சேணு ரிலங்கை வனத்தரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 3

71. கன்னங் கதக்க யற்கணிணைக்
காதற் பேதை யேந்தொடலை
கருத்தால் விளங்கு நவமணியிற்
கவின விழைத்த சிறுமனையை
என்னென் றுளத்தில் எம்பெருமான்
எண்ணிச் சிதைத்த தெமக்கன்றி
இருதா ளாலுன் சிறுதாயர்க்
கின்னல் புரித லியல்பன்றாற்
பொன்னஞ் சயிலச் சிலைபிடித்த
போரே றளித்த போதகமே
பொங்கர்ப் பசுங்கற் பகநிழலிற்
பொலிவான் பிடியின் மணவாளா
தென்னன் குலத்துக் கதிபதியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சேணு ரிலங்கை வனத்தரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 4

72. இட்ட விடைப்பெண் குழுவினுக்கும்
இரங்கு மருவி மலைக்குறவன்
என்னு முனக்கு மிடவழக்கிங்
கிலையே அலது மிருநிலத்துக்
கட்டு மயலார் மனைகண்டோர்
கருமத் தாழ்வு புகல்வதல்லாற்
காலாற் சிதைத்துக் குறும்புசெயக்
கண்டு மறியோங் கேட்டறியோம்
மட்டி லருளால் எண்ணான்கு
வளமை சான்ற வறம்வளர்த்த
மலையின் மகள்பெற் றெடுத்துவிழி
மணிபோல் வளர்த்துச் சீராட்டுஞ்
சிட்ட ரகத்துச் செழுஞ்சுடரே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சேணா ரிலந்தை வனத்தரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 5

73. காலா யுதமாங் கொடியவனே
கணக்கின் மலைவா யிருந்தவனே
கள்ளார் கடம்பா குரவையமர்
கருத்தா கூத்தன் கான்முளையே
மாலார் விரும்ப வருமருகா
மணமால் யானைக் கொருபாகா
வானோர் நடுங்கப் புவிநடுங்க
வருமோ ராட்டை மகிழ்ந்தவனே
மேலார் கடன்மா வடுவேலை
மேவு மொருவா வென்வடியேம்
விளம்பு துதியை முழுதுணர்நீ
வேறொன் றாக மதித்தனையோ
சீலா கோலா கலாமயிலா
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சேணா ரிலந்தை வனத்தரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 6

74. உருவிற் சிறந்த மணிநெடுங்கண்
ஓரா யிரத்தோ னரசிருக்கும்

உயர்பொன் னுலக வீட்டினுக்கும்
ஓங்கு குறிஞ்சி மனையினுக்கும்
பொருவத் தொடங்கிச் சமைத்ததுவோ
பொலன்மா மறுகில் விளையாடப்
புனைசெஞ் சதங்கைச் சீறடிகள்
பொருந்த நடக்கும் வழியிதுவோ
கருவிக் கனமு வடுப்பின்மிசைக்
காணு மாரற் பால்பெறுநீ
கருதி யெளியேம் புரிமனையைக்
கலைக்கத் தகுமோ கதிவழங்குந்
திருவிற் சிறந்த குருபரனே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சேணு ரிலந்தை வனத்தரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 7

75. ஆறு பலவு' மேழ்கடலும்
அடுத்த திசைக ளோரெட்டும்
அணியார் கண்ட மொன்பதுஞ்சீர்
அண்ட ருலகா தியபிறவுங்
கூறு வனிதைக் களித்தபிரான்
குறைவின் றமைத்தா னம்முறையே
கோக னகத்தோன் சமைத்ததனுற்
குற்றங் குறித்த திலையவனும்
வேறு தபதி புரிசெயலை
வெகுண்ட திலையே யாமிழைத்த
விளையாட் டினைநீ முனிகுவது
மேன்மைக் கழகோ வேதமெலாந்
தேறுங் கமல மலர்ப்பதனே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சேணு ரிலந்தை வனத்தரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 8

76. மூவர் பெரிய கடவுளரின்
முதன்மை யுடைய கடவுடிரு
முழுநீ றிலங்கு நெற்றிவிழி
முளைத்த வருமை யொருமகனீ

யாவை யதனுல் யாமிழைத்த
ஆரல் நிகர்க்கும் மணற்கூரை
அழிவு செயினு மதற்கிரங்கேம்
அருமா தவங்கள் பலகோடி
மேவ வியற்று முனிவரர்க்கும்
விண்ணு திபர்க்குங் கிடையாத
விரைத்தாள் புழுதி படிவதற்கே
மிகவும் இரங்கி மெலிகுவமால்
தேவர் குலசே ஞுபதியே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சேணு ரிலங்தை வனத்தரசே
சிறியேஞ் சிற்றில் சிதையேலே. 9

77. பாம்பா மரங்கந் துயில்கூரும்
பாயலெனக்கொண் டகமகிழும்
பரந்தா மனும்வா ரிசப்பொகுட்டிற்
பரமேட்டி யும்பற் பலமுறையால்
ஆம்பா லமரர் பணிந்தேத்தும்
அமரர் பதியின் மகவானும்
அறிதற் கருஞ்செஞ் சிறடியின்
அலர்கற் பகப்பூந் துகளுறினும்
ஓம்பா வருந்து மிம்மணிகள்
உறுத்திற் பொறுக்குந் தகைத்தன்ருல்
உமையாள் களபப் புளகமுலை
உபய கனகக் கடம்பொழிந்த
தீம்பான் மணக்குங் கனிவாயாய்
சிறியேஞ் சிற்றில் சிதையேலே
சேணு ரிலங்தை வனத்தரசே
சிறியேஞ் சிற்றில் சிதையலே. 10

## 9. சிறுபறைப் பருவம்

78. மாசற்ற விந்துசிலை யுப்பரிகை மணிமுன்றின்
மலரமளி மீதுகொழுநர்
மங்கைய ருடன்றுயிலும் வேலைமதி வரவந்த
வார்சிலைப் புனல்பெருகவே

ஆசற்ற பஞ்சணைகள் புணையாக நீந்திவிளை
யாடிமன தார்வமோங்க
அயனின்ற செம்மணிச் செய்குன் றி னேறவே
ருடையா பரணம்விரைகள்
பேசுற்ற பலவித மணிந்தகி னறும்புகை
பிறங்குபரி யங்கவணைமேற்
பிணையனையர் தருமின்ப வெள்ளமவர் கொங்கைப்
பெருங்குடங் கொண்டுநீந்துங்
தேசுற்ற வளமேவு பதரிவனம் வருமுருக
சிறுபறை முழக்கியருளே
சிறுபிறை நுதற்கவுரி பெறுசர வணக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே. 1

79. ஆதவ னுதிக்கவிரி சண்டகிர ணங்களால்
அந்தரம் வெதும்புறுமல்
ஆகாய கங்கைவெந் நீராகி யோடாம
லாயறல் வெப்பிடாமல்
மாதரையி னுனிலமும் வன்பாலை யாகாமல்
மக்களுடல் வெய்துறுமல்
மாமதியம் வாளரவு தீண்டுவிட வெம்மையால்
வாடியுடல் மங்காமலே
பேதமுறு முகிலகடு தடவிவெளி முகடுறு
பெரும்பணை தழைத்தொலிக்கும்
பிரமர நிரந்தமலர் மழைநறிய தாதுமழை
பெய்தெங் கணுஞ்சிறந்த
சீதள நிறைந்தபொழில் சூழ்பதரி வனமுருக
சிறுபறை முழக்கியருளே
சிறுபிறை நுதற்கவுரி பெறுசர வணக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே. 2

80. விரிக்குங் கதிர்ப்பசிய மரகதத் தாற்பொலி
விடங்கத் தடங்கண்மேய்ந்த
வெண்பளிங் கொளிவயிரம் வெயிலுமிழ் நிலாக்கற்றை
மிகுகனக மணியினுப்பண்
வரிக்குங் குமக்கொங்கை யர்களது செங்கையுறை
மாடகத் திவவியாழின்

மழலையந் தீஞ்சொல்சில பேசுதலு மயனின்ற,
வரிசிலை பிடித்தகுமரா
பரிக்கும் பசுங்கிள்ளை யினமென்று மதியமொப்
பாம்வெள்ளி வள்ளநிறையப்
பாலட்டி யூட்டுதற் கேகுதலு மங்லார்
பவளவாய் கிள்ளையன்னம்
தெரிக்கும் பெருஞ்சிறப் பார்பதரி வனமுருக
சிறுபறை முழக்கியருளே
சிறுபிறை நுதற்கவுரி பெறுசர வணக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே. 3

81. வார்தரு பெருங்ககன மூடுசெல் சுடர்ப்பரிதி
வானவன டத்துமொற்றை
மணியாழி யைங்கதி யினுறுசெலு மாறுவேழ்
மரகதப் புரவிபூண்ட
தேர்மிசை வளர்ந்துவிளை செந்நெலங் கதிர்நிரைத்
திரள்சூழ்ந்து மொய்த்தமுறைமை
தினந்தோறும் விண்டலத் தொடுதலா டாதெனச்
சீகரப் பெருவாரிசூழ்
பார்மக ணிவந்ததன கைகள்பற் பலகொண்டு
பற்றியிவண் வருகவென்று
பரிவுட னழைப்பது நிகர்ப்பக் கருங்களமர்
பாதுகாத் திட்டபயிரின்
சீர்பெறு செழுங்கழனி சூழ்பதரி வனமுருக
சிறுபறை முழக்கியருளே
சிறுபிறை நுதற்கவுரி பெறுசர வணக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே. 4

82. பொற்றுணர் கலித்துமெனப் பல்லவத் தொகைபொதுளு
பூங்கொம் பரிற்கோகிலம்
பூங்கிளிக டமரிக்கு மளிகுலவு சோலையிற்
பொலிநீண் மணிச்செய்குன்றைக்
கற்றிரள் எடுத்துநிரை காத்தவேய்ங் குழலிசைக்
கண்ணனென வெண்ணியுண்ணுங்
கன்றுதொட ரப்பசுக் குலம்வா லெடுத்துக்
கனைத்தோட வொழுகுதீம்பால்

எற்றுறு திரைத்துறைக ளெங்குநிறை யக்கங்கை
இங்குவந் துற்றதென்று
ஏந்திழை மடந்தையர் குடைந்தாடி வாரளக
ஈரம் புலர்த்திநிற்குந்
தெற்றிகள் செழித்திலகு பதரிவனம் வருமுருக
சிறுபறை முழக்கியருளே
சிறுபிறை நுதற்கவுரி பெறுசர வணக்கடவுள்
சிறுபறை முழக்கியருளே. 5

83. நீதிசொல் வேதமு மாகம மும்புகழ்
நிகழங்க மும்விதியால்
நியதியொ டோதி யுணர்ந்திடு வேள்வியும்
நெறிதரு பிதிர்தேவர்க்
கேதமில் திலதர்ப் பணமுத லியசெயும்
இயல்வேள் வியுமெழுநா
எரியிடை யோம மியற்றுறு வேள்வியும்
இடுபலி வேள்வியுநூல்
ஓதிய நன்மனை மேவும் விருந்தினர்
உள்ளமு வந்துண்ண
உதவிசெய் வேள்வியு மாகிய வேள்விகள்
ஒரைந் தும்புரியும்
மூதறி வோருறை கீழ்வே ளூரன்
முழக்குக சிறுபறையே
முத்திசை யருள்சிவ னுத்தமி புதல்வன்
முழக்குக சிறுபறையே. 6

84. வெல்லு மருந்திறல் மொய்ம்புள தானவர்
வெய்ய நிசாசரராம்
மேவிய வாளர வஞ்சிட வதரிடி
மிக்க முழக்கெனவுஞ்
சொல்லு மருந்தவ முனிவரர் யோகிகள்
சுரரின மன்பரெனுந்
தோகையினம் பெரிதோ கையு றும்புயல்
தொக்க முழக்கெனவும்
மல்லடு திண்புய மாயவன் வேதன்

வலாரி பெறும்பெரிய
வாழ்வு தருந்திரு மங்கல பேரிகை
மன்னு முழக்கெனவும்
முல்லை மணங்கமழ் கீழ்வே ளூரன்
முழக்குக சிறுபறையே
முத்தியை யருள்சிவ னுத்தமி புதல்வன்
முழக்குக சிறுபறையே. 7

85. நிச்சய முயற்றிய பதவியும் வீடு
நிகழ்த்தரு நூல்பலவும்
நித்த முழங்கவு மன்பர்க டோத்திர
நின்று முழங்கிடவும்
அச்சமில் மாதவ நீதி முழங்கவும்
அம்பர வும்பர்மகிழ்
ஆகுதி வேள்வி யெலாமு முழங்கவும்
அசபை முழங்கிடவும்
எச்சமில் சோடச தான..................
.............. முழங்கிடவும்
எங்கணு மல்கிய தரும முழங்கவும்
இசைகள் முழங்கவுமே
முச்சக மெச்சிய கீழ்வே ளூரன்
முழக்குக சிறுபறையே
முத்தியை யருள்சிவ னுத்தமி புதல்வன்
முழக்குக சிறுபறையே. 8

சந்தவிருத்தம்

86. வாரையலைத்த பயோதரமற்செயு மதகளிறே
மாசறுபொற்கலை மேவுநுசுப்பு மிருகபதியே
தாரணிமெச்சிய சாயல்களிப்புறழ் வனமயிலே
சாரநிரப்புவ தாகுமல்குற்றிகழ் வரியரவே
நேரிவையிற்பகை தீரவுமக்கிய லவுடதம்யான்
நேர்வனெனக்குற மாதுவசப்பட மொழிவிரகாற்
சேருமெழிற்கும ரேசன்முழக்குக சிறுபறையே
சீதளசித்திர கூடன்முழக்குக சிறுபறையே. 9

87. வானு றுமொப்பி லனேகவுடுக்கண் மகிழ்பெறவே
வாழ்வுமிகுத்திடு மாரல்மலர்க்குழல் மணிநகையார்
பீனதனத்தொழு காரமுதச்சுவை பெருகியபால்
பேதமில்பெட்பினி தாகவருத்திய ருசியினுமே
மானுதரத்திடை மேவுசிறப்புள மடமகளார்
வாசனைமொய்த்தலர் பூணிகர்கைத்தல மிடுதினைமா
தேனுகர்துப்புறழ் வாயன்முழக்குக சிறுபறையே
சீதளசித்திர கூடன்முழக்குக சிறுபறையே. 10

## 10. சிறுதேர்ப் பருவம்

88. தலைநிமிர வேய்ந்ததண் பாசிலைத் தும்பையந்
தார்ச்சூர பன்மன்வன்மத்
தகுவக் கடற்ருனை யுடனுடற் ருனைவிண்
தாவுந் துரங்கவெள்ளம்
மலைநிகரு மாழியந் தேர்வெள்ள மறைகூவி
மலைகின்ற போர்க்களத்தின்
மத்தகெச முடித்துரக முடியாகவுங் கலினவா
மாவினெடிய முடியாகவும்
.................................
.........................................
கொடிகொடேர் முடிகொடிய யானைமுடி யாகவும்
குருதியெழு கடலாகவுஞ்
சிலைமருவு மொருபகழி தொடுபதரி வனவீர
சிறுதே ருருட்டியருளே
திருமான் மகட்கினிய முருகா புகழ்க்குமர
சிறுதே ருருட்டியருளே. 1

89. மங்காத பெருவிறற் கடலவுணர் வரிசிலையின்
வாங்குநெடு நாணியரவும்
வடமாக வச்சிலைகள் பாய்பரித் திரள்பூண்ட
வலியமனி நுகமதாகப்
பொங்காழி கேடகம் பெயருமுரு ளாகவிடு
பொருபடைக் கலனெலாமும்
பொன்ரு ...ாக விருள்செறிந் தன்னவுடல்
பொழியவிழி குருதியீட்டந்

தங்காழி யாரினிது சுழலவிடு நெய்யெனத்
தகுவர்செங் குடுமிமுடிகள்
தடைபடா துடைபடுந் தெங்கின்வன் காயெனத்
தடநெடுந் தேர்நடாத்துஞ்
சிங்கார சங்கிராம சேய்பதரி வனவேல
சிறுதே ருருட்டியருளே
திருமான் மகட்கினிய முருகா புகழ்க்குமர
சிறுதே ருருட்டியருளே. 2

90. வாரோட நேரோட வளருமலை யிணையாகும்
வண்கரந் தாங்குமுலைமேல்
மறவவுணர் குலமாத ரழுகணீ ரோடியவண்
மாய்கணவர் கையின்வீழ்ந்து
பாரோட வசுரர்தம தூரோடு வாழ்வெலாம்
பார்மகட் கென்றுதானம்
பண்ணுதற் கவர்மாதர் விடுகரக நீர்செலும்
பரிசுறு களத்திலவர்தம்
போரோட விறலோடு பேரோட முன்புள்ள
புகழோட மதிமாழ்குறும்
புகரோட வமரருறு சிறையோட வஞ்சாது
பொய்யாத வெய்யோன்விடுந்
தேரோட வந்தகன பதரிவன வேலவன்
சிறுதே ருருட்டியருளே
திருமான் மகட்கினிய முருகா புகழ்க்குமர
சிறுதே ருருட்டியருளே. 3

91. கல்லனைய நெஞ்சத்து வெஞ்சமத் தஞ்சாத
காரவுண ரிற்றலைவராங்
காளையரு மீளியந் தானையரு மெதிரிடக்
கறுவுறும் பூதவீரர்
வில்லுமிழும் வாளியவ் வசுரர்தோண் மார்புகர
மிகுகண்ட துண்டமாக
மேவுமவ் வங்கமுறு மணிகளும் பின்னமாய்
விழுமுறைமை கழனியுழவோர்
நெல்லரிய வனசமும் பானலுங் குவலயமு

நிலைகுலைய வரிபடுவதோர்
நீர்மையென வானவர்க ளோதக்கிர வுஞ்சனெடு
நெடியதா ருகனைவெல்லுந்
தில்லைநகர் நிகரான பதரிகா னன்வேல
சிறுதே ருருட்டியருளே
திருமான் மகட்கினிய முருகா புகழ்க்குமர
சிறுதே ருருட்டியருளே. 4

92. பாய்மத மாத்த வடுப்பற்ற வயிறுகொப்
பரைகுருதி யுலைநீர்பதம்
பரிய வுரல்வெண் கோடுலக் கைகள்வாய்ப்
பல்லவரிசி மாவிடித்து
மாயிரத வச்சுவிற காய்விழிக் கனல்கொளுவி
வாளசுரர் நெடியதோள்கள்
வன்றுடுப் பிட்டினிய கூழாக்கி யுடைதலையின்
வருமூளை நெய்யளாவிக்
கூயலகை பந்தியுற் றணிமுடிக் கிண்ணங்கள்
கொண்டுண்டு தேக்கெறிந்து
கொண்டாடி மண்டுசெங் களவேள்வி யுஞ்செய்து
குரவையங் கூத்துமாடச்
சீயமுக னைப்பொருத பதரிவன ரண்தீர
சிறுதே ருருட்டியருளே
திருமான் மகட்கினிய முருகா புகழ்க்குமர
சிறுதே ருருட்டியருளே. 5

93. கள்ளுகு நறுந்தெரியன் மகதியாழ் நாரதன்
காசறு மகத்தகத்தில்
கடல்வடவை நீனிறப் படிவத்த தெனவந்து
கதறுகுர லிடியார்ப்பினுல்
ஒள்ளொளிய வண்டம்வெடி பட்டுவெளி யாகநெடி
தோடும்விசை யோதையதனுல்.
ஓங்கிய பிறங்கல்கள் கறங்காக விழிசிதற
வுறுபொறியி னுலகுவாட
வெள்ளமெழு விதமுமுடை படவடையும் வன்றகரை
விமலனீ யுந்துகென்ன

வீரனுய்த் திடவந்த வாட்டைவிளை யாட்டிநெடு
விண்டிசை யெலாநடாத்துந்
தெள்ளமுதி னுற்பவித் தியல்பதரி வனவனக
சிறுதே ருருட்டியருளே
திருமான் மகட்கினிய முருகா புகழ்க்குமர
சிறுதே ருருட்டியருளே. 6

94. ஐயநுண் ணிடைகொம்பர் களபமுலை யக்கொப்பின்
அலர்கன்னி காரமுகையா
மணிமுலைக் கண்களவ் வரும்புறு சுரும்பாகும்
அழகுதர ரோமரேகை
மையின்முகை நின்றுவரு தொருரை நாபியதின்
வருதாரை மருவுசுழியாம்
வளரல்குன் மதுநிறையும் வாவியதில் விளையாடு
வாஞ்சையுண் டென்றுதழையுங்
துய்யதண் டலையின்மலர் கொய்யுமட வார்கள்பொற்
றுகில்பிடித் தீர்க்குமளவிற்
ரேங்கையர்க ளாடவர்த மயனின்று நாணிமகிழ்
தூயநகை யாயநிலவாற் ....
..............................................................
..............................................................
..............................................................
.............................................................. 7

# குறிப்புரை

## விநாயகர் வணக்கம்

### காப்பு

பொன்னுலகு - தேவலோகம்: ''விளங்குபொன் னுலகத் துள்ள துப்புரவு'' (சீவக. 527.) முகில் - மேகம். பூங்கமலமலரோன் - பிரமன். பூவை வண்ணன் - காயாம் பூப்போன்ற நிறத்தையுடைய திருமால். ''பூவை வண்ணனண்ணல்'' (பெரிய திருமொழி. 2 - 2 - 8.) வச்சிரப் புருகூதன்- வச்சிரப்படையையுடைய இந்திரன். வாரணக்கடவுள் - விநாயகர். உபயம் - இரண்டு. பதமலர்: உருவகம். கன்னல் - கரும்பு. கானவர்கள் வானவர்களாக வரு வல்லி: வள்ளி வேடர் குலத்தில் தோன்றியதால் வேடுவர்கள் வானவர்களாக ஆனார்கள். இவ்வாறு கூறியது சிறப்பு.

கனகவர் - தேவர்கள்.

மால் - திருமால். மால்வனே மாமனென: ''மாயோனே மாமனென்னு மருகோனே'' (திருப்புகழ். 149.)

''வபயோ : அபேத :'.' என்ற விதிப்படி 'பால' என்ற சொல்லே 'வால' என்று கையாண்டுள்ளார் ஆசிரியர்.

ஒரு முகத்தோடு வலதுகையில் தாமரை விளங்க, இடதுகை இடுப்பில் இருக்க, உயர்ந்த தோள்களுடனும், செந்தாமரை போன்ற நிறத்துடனும் விளங்குபவர் பாலசுப்பிரமணியர்.

''பத்மஸவ்ய கடிஸம்யுத வாமம் பத்மகாந்தி நிபம் ஏகமுகஞ்ச
பால விருத்திகரம் ஈசுவரஸூநும் பாலம் உந்நதபுஜம் ப்ரண
தோஸ்மி''

(குமார தந்திரம். படலம். 2.)

மற்றொரு வகை :- ஒரு முகத்தோடும், இரண்டு கண்களோடும், இரண்டு தாமரையை இருகைகளிலும் வைத்துக்கொண்டு இள ஞாயிறு போன்ற நிறத்துடன் பிரகாசிப்பவர் பாலசுப்பிரமணியர்.

(குமார தந்திரம். படலம். 2.)

காப்புப் பருவம் 1. பகிரண்டம்—வெளியண்டங்கள். "சீர்கொண்ட உமையாள்." "அகிலாண்ட கோடி ஈன்ற அன்னையே பின்னையும் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயிலே" (தாயுமானவர். மலைவளர் காதலி 5.) சீதமதி வேணியரன் - குளிர்ச்சி பொருந்திய சந்திரனைத் தலையில் அணிந்துள்ள பரமசிவன். தண்டலை - சோலை. "தண்டலை மயில்கள் ஆட" (கம்ப. பால. 49.) "தண்டலை ஈன்ற" (மீனாட்சி 35.) நிருமலன் - குற்றமற்றவன். (அதாவது ஆணவம், கன்மம், மாயை என்ற குற்றங்கள் அற்றவன்)

செங்கமலை என்னும் மின் - இலக்குமி. மூவுலகு எனும் கழனி - மூன்று உலகங்களாகிற வயல். மூவுலகு - சுவர்க்கம், மத்தியமம் (பூமி), பாதாளம். ஏர் - அழகு. ஓகை - மகிழ்ச்சி. ஓகையோடு இருத்தி" (வி. பா. குருகுலச். 93.) நீலமுகில் - திருமால்.

2 தேமொழி - தேன்போன்ற இனிமையான சொல். தேன் + மொழி : "தேன் மொழி மெய்வரின் இயல்பும், மென்மை மேவின் இறுதி அழிவும்" என்ற நன்னூல் சூத்திர விதிப்படி நிலைமொழியிலுள்ள இறுதி எழுத்தான னகரமெய் கெட்டுத் தேமொழி என்றாயிற்று. ஆலாலம் - ஆலகாலவிடம்.

சீலாலாதிபன் - எல்லாவற்றிற்கும் மூலமாக உள்ளவன். "மலைக்கொடி பாலா சீலா" (முத்துக்குமார. தாலப்பருவம். செய்; 9.)

கேழ் ஆர் தாமரை - சிறந்த நிறத்தையுடைய தாமரை. "ஒண்கேழ் நூற்றிதழ் அலரின்" (புறம். 27.) நீபத்தொடை - கடம்பமாலை. மொய்ம்பன் - வீரன். சூர் - சூரபத்மன்.

3. பரிபாகர்கள் - அருளைப் பெறுதற்கேற்ற மனப்பக்குவம் உள்ளவர்கள். மாசறு - குற்றமற்ற. பரசுகம் - மேலான சுகம். மகபதி - இந்திரன். கரம் - கை. சிற்பரை - பார்வதி. மான்மதம் - கத்தூரி. மதனலர் வாளிகள் - மன்மதனுடைய அம்புகள். மன்மத பாணம் ஐந்து. அவை: தாமரை, அசோகம், மா, முல்லை, கருங்குவளை. அளகம் - கூந்தல். இலந்தைவனம் ; கீழ்வேளூர். பழிச்சுதும்—துதிப்போம். தயித்தியர் - அசுரர்கள். மகதி- நாரதரின் வீணைக்குப்பெயர். நவவீரர்கள்: வீரவாகுதேவர், வீரகேசரிதேவர், வீரமகேந்திரதேவர், வீரமகேசதேவர், வீரபுரந்தரதேவர், வீர

ராக்கததேவர், வீரமார்த்தாண்ட தேவர், வீராந்தகதேவர், வீரதீர தேவர். தகர் - ஆட்டுக்கிடா.

4. உலவை - தந்தம். அயில் - வேல். அன்ன - போன்ற. உவம உருபு. மோகனக் குறவனிதை - வள்ளி.

5. பரந்தாமன் - திருமால். பொன் - இலக்குமி. தருவானை- வினையாலணையும் பெயர். தனிச் சேவகன் -ஒப்பற்ற முருகன். இலஞ்சி மலர் - மகிழமலர்.

6. மந்தரம் - மேருமலை. விதலை - நடுக்கம். பயம். பனிப்படு பைதல் விதலைப்பருவத்து. (பரி. 11.75) சேணமரர் - தேவர்கள். யுகளம் - இரண்டு. சரண தாமரை - உருவகம். வலம் ஆட - வலப் பக்கம் துடிக்கவும். நிசாசரர் - அரக்கர். இரவில் சஞ்சரிப்பவர்கள் என்ற காரணம் பற்றி அரக்கர்கள் நிசாசரர் என்று வழங்கப்பட்டனர். அயில்வேல் - கூர்மையான வேல்.

7. உந்தி - கொப்பூழ். நிகமம் - வேதம். முதிருநிகமச் சிரத் தானை "தகரத் தந்தச் சிகரத் தொன்றித் தடநற் க்ஞ்சத் துறை வோனே" (திருப்புகழ். 21.) விசாகன் :—வைகாசி மாத விசாக நட்சத்திரத்தில் தோன்றியவன்.

8. தாலவட்டம்: யானையின் காது. (சீவக.1677, 2154 ந. உரை) குசம் - முலை. குகன் - மலைக் குகைகளில் கோயில் கொண்டிருப் பவன். குகை - தகராகாசம். இதுவே இதயபுண்டரீக சிதாகாசம். இதில் எழுந்தருளியிருப்பவன் குகன். தகராகாசமானது வேதங்களில் குகை என்று வழங்கப்படுகின்றது. சிவபெருமான், சகல சீவராசிகளின் இதய கமலங்களில் வசித்திருப்போன் உன் மகனுதலின் அவன் குகன் எனப்படுவான், என்று பார்வதிக்குக் கூறி யதைக் கொண்டு அறியலாம். தரு - கற்பகமரம். அயிராணி - இந்தி ராணி. குலிசப் பெருமாள் - இந்திரன். "கஞ்சமுங் குலிசப்பிரான்" (முத்துக் குமார. 36) குலிசம்-வச்சிராயுதம். அதனையுடையவன் குலிசன். "குலிசத்தமரர்கோன்" (கம்ப. பால. நகரப். 4.)

9, கனதமனியவரை - மேருமலை. "தமனிய தநுதரி" (திருப்புகழ், 511) கனதமனியவரை வண்ணவிற் கோட்டினள்: மாகேசுவரி. கடல் புகும் அவனியை முன்னையிற் சேர்த்தவள்: வாராகி. திருமாலுக்கும் அம்பிகைக்கும் உள்ள அபேத சம்பந் தத்தைக் காட்டுகின்றார். அம்பிகைக்கு வாராகி என்ற திருநாமம்

LIBRARY. Date MADRAS-28.

உண்டு. திருப்புகழ் ஆசிரியரும் திருமாலே தேவி என்று பாடி யுள்ளார்.

கதிர்விரி திகிரி - ஒளி வீசுகின்ற சக்கரம். நாராயணி. "திகிரி மேவுகையாளி" (திருப்புகழ். 526) "தயங்கு கவுத்துவமோ பூண் தனிச்சோதிச் சக்கரமே" (தக்கயாகப்பரணி 116)

இனமலி சதுமறை யுண்மையைத் தேறினள் - அபிராமி. பிராமி என்றும் வழங்கும். எழுதருவனநகர் விண்ணவர்க்காத் தவள் - இந்திராணி.

இனமயில் மிசைவரும் அன்னமெய்ப் பேட்டினள் - கௌமாரி.

கலையினை நடவுமோர் வெம்முனைக் காட்டினள் - காளி. (துர்க்கை) "கலை காமுறுவி" (பெருங். உஞ்சைக். பாலைநிலங் கடந்தது. அடி. 24) வன்னி - அக்கினி. தகுவர் - அரக்கர்கள். குறமகள் - வள்ளி.

10. ஞானசுகமிக்கவனை: "நதிபுத்திர ஞான சுகாதிப" (கந்தரநுபூதி 50) கிரி - மலை. கோடன்மலர் - வெண்காந்தள் மலர். பிரசம் - தேன். குக்குடப்பதாகையன் - கோழிக் கொடியோன். வாளகிரியைத் தனது தாளிவிடி யப்பொருது வாகைபுனை குக்குடபதாகைக்காரன் (வேளைக்காரன் வகுப்பு அடி 22) மைப்புயல் - நீருண்ட மேகம். வாதுவர் - பாகர்.

முப்பத்து முக்கோடி தேவர்—ஆதித்தர் பன்னிருவரும், உருத் திரர் பதினொருவரும், வசுக்கள் எண்மரும், மருத்துவர் இருவரு மாகிய முப்பத்து மூவரையும் தலைவராகவுடைய முப்பத்து மூன்று கூறுகிய தேவர்கள்.

**2.** செங்கீரைப்பருவம்; 1. ஆறு சமயம் - சைவம், பாசுபதம், மாவிரதம், காளாமுகம், வாமம், பைரவம் என்னும் அகச் சமயமும், பாடாண வாதம், சமவாதம், சங்கிராந்த வாதம், ஈசுவர அவிகாரவாதம், பரிணாமவாதம், சிவாத்து விதம், என்னும் அகப்புறச்சமயமும், தருக்கம், மீமாஞ்சை, ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத் திரம் என்னும் புறச்சமயமும், உலகாயதம் சௌந்திராந்திகம், யோகாசாரம், மாத்மிகம். வைபாடிகம், ஆருகதம் என்னும் புறப் புறச் சமயமும் என நால்வகைப்பட்ட சமயங்களும் ஒவ்வொன்றும் அறுவகைப்பட்டிருத்தலால் அந்தந்தச் சமயக் கடவுளர்களை வழி

படுவோர்க்கு முத்தி யருளுவோன்தான் ஒருவனேயன்றி வேறிலர் என்று அறிவுறுத்தற்கே தான் ஆறு திருமுகங்களையுடையவன் என்பர். ''ஆறு சமயக் கடவுள்......வதனமணியே'' (திருப்போரூர் முருகன் பிள்ளைத் தமிழ். சிறுபறை. 3.)

''ஆறு சமயத்தும் அதுவதுவாய்'' (தாயுமானவர் எந்நாட் கண்ணி. 6.) நச்சும்—விரும்பும்.

பெத்தமுத்தி—பந்தம், வீடு. பாசத்தோடு கூடிய பெத்த நிலை. ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதாயி, என ஐந்து. ''பந்தமும் வீடும் படைப்போன் காண்க.'' (திருவா. திருவண்டப் பகுதி. அடி. 52.) உயிர்களைப் பிறப்பு இறப்புக்களில் செலுத்துதல் பந்தமும், அப்பற்று நீங்குவதற்கு உரிய பக்குவ காலத்தில் ஞானம் வாயிலாக வீடு அடையச் செய்தல் முத்தியும் ஆகும். ஆகையால் ''பெத்த முத்திகளையெல்லாம் பிறழாமல் ஈவன்'' என்றார்.

சங்காழி மால்மருக: ''பண்டாழி சங்கு கொண்டாழி தங்கு பண்போன் உகந்த மருகோனே'' (திருப்புகழ். 369.)

2. சந்ததமும் - எப்பொழுதும். பொற்பு - அழகு. நின்மலன் - குற்றமற்றவன்; சிவபெருமான். ஓகை - உவகை. நேயம் - அன்பு.

3. தகடு அகடு—வெள்ளித் தகடு போன்ற வயிறு. ''தகட்டு அகட்டு இளவாளை'' (மீனாட்சி. 18.)

வெடி போய்: ''வெடி போய் மீளும்'' (மீனாட்சி. 18) ''வெடி வாளை............பூத்தந்த கற்பகக் காட்டினை யுழக்கி'' (முத்துக் குமார. சிறுதேர்.8)

4. ஐந்து முகம்: அதோமுகம். ஈசானமுகம், சத்தியோசாத முகம், வாமதேவ முகம், தற்புருட முகம். ''ஈசனே அவன்.......... அறுமுகத் துண்மையால் அறி நீ'' (கந்த. மகேந்திர. 129) ''சங்கரனே முருகேசன்'' (கந்த. உற்பத்தி 56.)

ஆறுமுகம்—சிற்சத்தியாகிய சிவசத்தியின் வதனம் ஒன்றும் சிவபெருமானுடைய முகம் ஐந்தும் சேர்ந்து அறுமுகன் எனப் பட்டான்.

ஐந்துமுகன் என்ற சொல்லில் ஆறு எழுத்துக்களும், ஆறுமுகன் என்பதில் ஐந்து எழுத்துக்களும் இருப்பதால் ஐம்முகனே அறுமுகன் எனத் தெரிகின்றது.

அம்புய மலர்த்தவிசினோன்—பிரமன். தாரகப் பொருள்— ''ஓம்'' என்னும் பிரணவப் பொருள். துப்பு—பவளம். செஞ்

சரணம் : பண்புத் தொகை. ஆடகத் தூவி - பொன் போன்ற இறகு.

5. பாசு - பசுமை: பச்சைநிறம். ''பாசொளிவிரிக்கும்'' (சொர்ண புரி. 63.) அளி - வண்டு. பதரிவனம் - இலந்தை மரங்கள் நிறைந்த காடு.

6. மலேக்கொடி - பார்வதி. சுரர் - தேவர். மன்னிய - நிலேபெற்ற.
7. குஞ்சி - ஆண்களின் தலேமயிர்.'' ''குஞ்சியழகும் கொடுந் தானேக் கோட்டழகும்'' (நாலடியார். 131.) சுட்டி - குழந்தை களும் மகளிரும் அணிந்து கொள்ளும் நெற்றியணி. ''இட்ட பொட்டும் சுட்டியும்'' (முத்துக்குமார. செங். 1)

கண்டசரம்—கழுத்தில் அணியும் அணிவகைகளுள் ஒன்று. ''முத்தின் சால்வுறு கண்ட சரம்'' (கந்த. அவைபுகு. 34.)

கண்டிகை - உருத்திராக்க மாலே. ''புரிநூலும் கண்டிகையும்'' (கந்தர்கலி 55.) பரிபுரம்—சிலம்பு. ''பாதத்து அணிந்த பரிபுரமும்'' (கந்தர்கலி. 56.)

8. கலேமதி - கலேகளேயுடைய சந்திரன். 'கலேமதிக்கலசவமுதை' (''முத்துக்குமார அம்புலி. 9)

முகிணகை : முகிழ்+நகை. ''நவ்வரின் முன்னழிந்து பின் மிக்கணவ்வாம்'' என்ற விதிப்படி மகாரம் கெட்டு நகரம் ணகர மாயிற்று'' (வீரசோழியம் சந்திப், சூ; 18) நிகர் - உவமவுருபு. பண்டி - வயிறு. ''பண்டி சரிந்தாட'' (மீனாட்சி. செங். 7.)

9. உத்தரம் - வடக்கு. முனி - அகத்தியன். பாதப்போது : உருவகம். பாதமாகிய மலர்.

10. கங்காளன் - சிவபெருமான். கங்காளன் பாகம் நயந்த மலேக் கொடி - வாமனர் செருக்கடைந்த காலத்தில் முழுவெலும்பை ஆபர ணமாகக் கொண்டசிவனது இடது பக்கத்தில் இருக்கின்ற பார்வதி. கங்காளம்-முழுவெலும்பு. ''கங்காளந்தோண் மேலே காதலித்தான் காணேடி'' (திருவாசகம், திருச்சாழல், 11.) கந்தன்-சேர்க்கப்பட்ட வன்." கந்தன் எனப் பேர் புனேந்து'' (கந்தர்கலி. 84.) ''ஆறுமோருரு வதாக ஆக்கலிற் கந்த ஞுன்'' (தணிகைப். சீபரி. 29 ) சந்தாபம் - மனத்துன்பம். ''சந்தாபந் தீர்த்த சடகோபன்', (திவ் திருவாய். நூற். 15.) சரவணம் - நாணற்காடு. சரவனம்=சரவணம் ''ஆற்றுள் சரவணத்தில்'' (கந்தர்கலி 81.) சுகந்தம் - நறுமணம்.

3. தாலப்பருவம் : தீஞ்சொல் - இனிமையான சொல். விரை - மணம். ''விரைசெறி கமலப்போதில் வீற்றிருந்தருளுஞ் செவ்வேள்''

(கந்த. திருவவ. 100) கனகம் - பொன். கன்னல்சிலேவேள் - மன் மதன். மகபதி - இந்திரன். மகபதிக்கு மருகா - இந்திரனின் பெண்ணுன தெய்வயானேயின் கணவனே. ''மகபதிக்கு மருகா'' என்ற பிரயோகம் சிறப்புடைத்து.

2. முறுக்கு- இதழ்களின் பிணிப்பு. அரமியம் - நிலாமுற்றம். ''அரமியம் ஏறி'' (மணி. 12. 47.) புரிசை - மதில். ''மூதூர்ப் புரிசை வலங்கொண்டு'' (மணி. 28. 170.)

3. கோலம் - அழகு. ''கோலவாண்முகத்தள்'' (மணி. 18.40) வெண்டிரை - வெண்மையான அலே. காமரப்பண் - சீகாமரம் என்னும் பண். ''தும்பிகாமரஞ் செப்பும்'' (சிறுபாண். 77.)

4. பசுந்தோடு - பசுமையான பூவிதழ். துளபம் - துளசி. பணே - பருத்த. ''பணேயெனும் பெயரே பருத்தலும்...கொம்பு மாம்'' (வடமலேநிகண்டு. 1030) ஒரு மாமன்-ஒப்பற்ற திருமால் குயிற்றி - பதித்து.

5. நவவீரர் :- ''நவ வீரருக்குண் முன்னேன்'' (கந்தர்கலி. 88.) தருணம் - இளமை. அருணம் - சிவப்பு. விமலன் - ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களும் அற்றவன்.

6. தளவம் - செம்முல்லே. ''முல்லேயொடு தளவமலர் உதிர'' (ஐங். 422.)

7. புலோமசை – இந்திராணி. பகிரதி - கங்கை. துங்க - சிறந்த. பதபங்கயம்: உருவகம். இங்கிதம் - இனிமை. வங்கியம் - இசைக்குழல்.

8. இகபர முறுசுகம் - இம்மை மறுமையின்பம். அபயம் - அடைக்கலம். வரதம் – கொடுத்தல். தாரகை – நட்சத்திரம். மண்டிய – நிறைந்த.

9. காதுஆர் – காதில் பொருந்திய. ஞானகாரா – ஞானத்திற் கிருப்பிடமானவனே.

10. வேய் – புல்லாங்குழல். வேள் – மன்மதன். தீ—தீமை. சூர் – சூரபத்மன். மாயூரா - மயிலே வாகனமாக உடையவனே. ''நாக பந்தமயூரா'' (திருப்புகழ்) ''மேகமொத்தமா யூரா நமோ நம'' (திருப்புகழ். 997.) பாவாணன்–புலவன். மாயாவீடு–அழியாத மோட்சம். கேயூரம்- தோளணி.

**4. சப்பாணிப்பருவம்.**

1. விட்புலம் – விண்ணுலகம். ''எங்கட் புலங் காண, விட்புலம் போயது'' (சிலப். பதி. 8.) ''விட்புலத்தோடு முடுமீன்'' (மீனுட்சி. அம்புலி. 2)

2. சீகரம் – அலை. ஏழாடை: உப்பு, கரும்பு, தயிர், பால், நெய், தேன், சுத்தோதகம் (தூய்மையான நீர்) ஏழு கடல் களையும் ஆடையாக உடையவள் நிலமகள். ''மூரி நீராடை இருநில மடந்தை முதுகுளுக் குற்றனள் முரல'' (கம்ப. சுந்தர. 423) திரு எழுத்து—சரவணபவ என்னும் ஷடக்ஷரம்.

3. தேனனை = தேன் + நனை. கேசரம் —பூந்தாது. வடதாரு— ஆலமரம். துயில்—யோக நித்திரை. வாணிபதி—பிரமன். வேதத் தின் ஆதிப்பழம்பொருள் - ஓம் என்னும் பிரணவம். ''பாமேவு தெய்வப் பழமறை'' (கந்தர்கலி. 1.) மிகை – குற்றம். குலுங்க – நடுங்க. புடைத்த – குட்டின.

''செவ்வேள் குட்டினுன் அயன் நான்குமா முடிகளும் குலுங்க'' (கந்த. அயனைச் சிறைபுரி. 14.)

4. பசுந்தமிழ் செந்நாப்பெருந்தவவிதிக்குறுமுனி-அகத்தியன். பாதவனசம் - பாதமாகிய தாமரை. உருவகம். கோமளப்பாகர் - சிவபெருமான்.

5. பொற்சுட்டி - பொன்னுல் செய்யப்பட்ட ஒருவகை நெற்றி யணி. தொங்கல் - காதணிவகை. தாது – பூந்தாது. இச்செய்யுளில் முருகப்பெருமான் அணிந்துள்ள ஆபரணவகைகள் கூறப்பட் டுள்ளன.

6. தத்து – தாவுகின்ற. ''தத்துநீர்க்கடல்'' (கம்ப. படைத் தலைவ. 54.) அரி முகவன் - சிங்கமுகாசுரன். ''அலைசூரன் வெற்பமர் முகனுனை வத்திரனொடசுரா ரிறக்கவிடும் அழல்வேலா'' (திருப் புகழ். 582) சங்கிராமத் தொழில் – போர்த்தொழில். வச்சிரம் – வச்சிராயுதம். வெட்சி மலர்த்தொடை - வெட்சிப் பூவாலாகிய மாலை.

7. பணியரசு – ஆதிசேடன். எட்டரவு:- அநந்தன், வாசுகி தக்கன், கார்க்கோடகன், பதுமன், மகாபதுமன், சங்கபாலன், குளிகன். ''இரு சதுர திசையிலுரகமும்'' (திருப்புகழ் 1095.) மதகிரி எட்டு – ஐராவதம், புண்டரீகம், வாமனம் குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சார்வபௌமம், சுப்பிரதீபம்.

திசைக்கிரி – திசையிலுள்ள மலைகள், கைலை, இமயம், மந்திரம், விந்தம், நிடதம், ஏமகூடம்: நீலகிரி, திருப்பருப்பதம் கந்த மாதனம் ''திசைக்கிரியை முதற்குலிசன்'' (வேல்வகுப்பு) சுவற – வற்றிப்போக, சுலவு – சஞ்சரிக்கும்.

8. களபம் – சந்தனம். புளகிதம் – மயிர்ச்சிலிர்ப்பு. பாரதி— கலைமகள்.

10. களி – மகிழ்ச்சி. முரல – சப்திக்க. பற்பம் —பதுமம். அற்பாள – அன்பு ஆள. துதி பெறு புலமை, நிரம்பிய மெய்ப்புகழ் நற்கீரர்........முதற்றேவ ''நக்கீரர் சொன்ன முருகாற்றுப் படைத் தமிழும்...புனிதச் செவிக்குள் ஆர்த்த புகழாள'' (திருத்தணிகைத் திருவிருத்தம். 10.) ''கீத இசை கூட்டி வேதமொழி சூட்டு கீரரியல் கேட்ட க்ருபைவேளே'' (திருப்புகழ். 1278.)

5 முத்தப் பருவம் 1. கனகப் பொகுட்டு ''பொலம் பொகுட்டலர்'' (மீனாட்சி. காப்பு 8.) தரங்கம் - அலை. பயோததி - பாற்கடல். ''திசைகெழு பயோததி துயிலும் தெய்வவான் மரகதமலை'' (கம்ப. திருவவ. 12) பிறங்கும் - தோன்றும். மாடகம் - யாழின் முறுக்காணி. ''இடக்கை நால்விரல் மாடகந் தழீஇ'' (சிலப்: 8. 28) முன்னைப்பொருள்—''ஓம்'' என்னும் பிரணவம். ''சுருதியின் முற்பட்டது'' (திருப்புகழ். 1.)

2. வயிரப்படையோன் — இந்திரன். மகரமுயர்த்தோன் - பாண்டியன். குஞ்சரம் - யானை. முருகு - மணம். ''முருகுசெறிகுழல்' (திருப்புகழ். 22.)

3. வழுவை - யானை. கருமா வழுவை என்று கொண்டுகூட்டுக. மருப்பு - யானைத்தந்தம்.' சுரபி - பசு. முத்துத்தோன்றுமிடத்தை ஆசிரியர் இப்பாடலில் கூறுகின்றார். யானைத்தந்தம், கமுகு, மூங்கில், தாமரை, கரும்பு, சந்திரன், மங்கையர் கழுத்து, பாம்பு, மீன், பசுவின்பல், நந்து, நெல், உடும்பு, சங்கு முதலிய இடங்களில் முத்து உண்டாகும். குரண்டம் - கொக்கு.

4. உடு - நட்சத்திரம். ஆட்டி - நீராட்டி. புலர்த்தி–போக்கி. ''ஈரம் புலர்த்தி'' (சொர்ணபுரி 13) திருத்தி – வாரி முடிந்து. நீறு – திருநீறு. நிலக்காப்பணிந்து – மண்ணை எடுத்துச் சாந்தாக நெற்றியில் அணிந்து. ''மண்பொட்டணிந்து நீறிட்டு'' (பிரபு லிங்கலீலை'. மாயை. உற்: 46.)

5. பகலோன் - சூரியன். பகழி - அம்பு.

6. உன்ன - நினைக்க. வெண்டயிர்=பண்புத்தொகை. கால்கள் - வாய்க்கால்கள். கனகாசலம் - மேருமலை.

7. பாரவர் - பூமியிலுள்ளவர்கள். வண்டர் - இறுதிப்போலி. இச்செய்யுளில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலத்தை ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

8. கின்னரம் - ஒருவகைப்பறவை. ''கின்னரம் வியக்கும்'. (பண்டார மும்மணிக்கோவை 17: 17.) மருள்-மயக்கம். பேனம்-நுரை. துதைந்து - மிகுந்து.

9. மகவிணதிபன் உரிய குமரி—தெய்வயானை. ''மகபதி தருசுதை''- (திருப்புகழ். 168) மறவர் சிறுமி-வள்ளி. சதுர மறையின் உத்தம: ''சதுரம் மறை'' (ஞானசம்பந்தர் தேவாரம்)

சரவணபவ :—'ச' காரத்தால் லக்ஷ்மியும்,' 'ர' காரத்தால் வித்யையும், 'வ' காரத்தால் போக மோட்சமும் 'ண' காரத்தால் சத்ரு சம்ஹாரமும், 'ப' காரத்தால் ம்ருத்யுவை ஜயிப்பதும், 'வ' காரத்தால் நோயற்ற வாழ்வும் வாய்க்கின்றபடியால் இந்த ஆறு தத்துவங்களையும் பூலோகத்தில் நிலைநிறுத்துவதற்காகச் சநத் குமாரர்கள் முதலான ஆறு சிஷ்யர்களை வியாஜமாக வைத்துக் கொண்டு பகவான் உபதேசம் செய்தார் என்பது வரலாறு.

10. தவள பதுமமலர் - வெண்டாமரை மலர். குக்குடம் - கோழி ''திக்கதும திக்கவரு குக்குடமும்'' (திருப்புகழ்.2) ''குக்குடம் கொடியதாக வைத்தாய்'' (முத்துக்குமார. அம்புலி. 2)

மும்முரசு - தியாக முரசு, மணமுரசு, வெற்றிமுரசு. ''மும்முரசுமுமதிர் காவிரி நாடன்'' (முத்துக்குமார. சிறுபறை. 8)

6. வருகைப்பருவம் 1 பராசரமுனிவர் புத்திரர்கள் சாபம்பெற்ற வரலாறு: பராசர முனிவர் புத்திரர்களாகிய தத்தன், அநந்தன், நந்தி, சதுமுகன், பருதிபாணி, மாலி முதலிய அறுவரும் விளையாட்டாகச்சரவணப் பொய்கையில் முதலையுருக்கொண்டு நீரை அலைத்து விளையாடினர். அதனால் நீர்கலங்கி அதிலிருந்த மீன்கள் மேல் மிதந்தன. அம்மீன்களை இந்த இருடிபுத்திரர்கள் பொறுக்கிக் கோரையிற் கோத்து விளையாடுகையில், பராசரர் சரவணப் பொய்கைக்கு நீராட வரும்போது அவர்களின் செயல்களைக் கண்டு கோபித்து நீங்கள் நெறியல்லாநெறி செய்வதால் மீன்களாக ஆகுக எனச் சபித்தார்.

சாபம் நீங்கிய வரலாறு :—

உமாதேவியார் முருகக் கடவுளைப் பேரன்போடு அணைத்து எடுத்தபோது அவர் மார்பிலிருந்து பெருகிய பால் நதிபோல் பெருகிச் சரவணப் பொய்கையில் புகுந்தது. சாபத்தினால் மீன்களாக இருந்த பராசர புத்திரர்கள் அறுவரும் அப்பாலைப் பருகினார்கள்; பருகியவுடன் மீன்வடிவம் நீங்கப் பெற்றார்கள்.

2. பணம் – படம். செந்தமனியச் சிகரமுந்து மந்தரம் - மேருமலை. முத்தாபம் - ஆத்தியான்மிகம், ஆதிபௌதிகம் ஆதிதைவிகம். ஆத்தியான்மிகம் — தன்னைப்பற்றி வரும் துன்பம். ஆதிபௌதிகம் — பஞ்சபூதங்களாலும், பிராணிகளாலும் உண்டாகும் துன்பம். ஆதிதைவிகம் - தெய்வத்தால் வரும் துன்பம்.

3. வனசவாவி - தாமரைக்குளம். சினவாளை - கோபமுள்ள வாளைமீன். நாளிகேரம் - தேங்காய். உம்பர்தரு - கற்பகதரு. ''உம்பர்தருத்தேனுமணி'' (திருப்புகழ். 2.) கொக்கு இறகொடு அக்கணியும்நக்கன் -சிவபெருமான். அக்கணி - சங்குமாலை. ''கொக்குடையிறகொடு அக்குடை வடம்'' (தேவாரம்-திருப்பிரமபுரம் 2) ''கிரணகுறைப் பிறையறுகு அக்கு இதழ் மலர் கொக்கிற கோடே'' (திருப்புகழ். 180.)

கொக்கிறகு - கொக்கு உருவம் கொண்டு தேவர்களைத் துன்புறுத்திய குரண்டாசுரன் என்னும் அசுரனைக் கொன்று, அக்கொக்கின் இறகைச் சிவபிரான் அணிந்தனர். (குரண்டம் - கொக்கு) (கந்தபுராணம் 3-9-64)

''குலம்பாடிக் கொக்கிறகும்பாடி'' (திருவாசகம். தெள்ளேணம்.) 'கொக்கிறகு சென்னி உடையான் கண்டாய்' (அப்பர். 6. 392.)

4. பீடிகை - ஆசனம். தோம் - குற்றம்; இட்டி - யாகம். அனந்தம் - அளவில்லாத. புலகன் - ஒரு ரிஷி; பிரமனின் மானச புத்திரர்களில் ஒருவர். பிரமன் நாபியில் தோன்றியவர் என்றும் கூறுவர். இவருக்குக் கின்னர கிம்புருஷர் என இரண்டு பிள்ளைகள். இவரது மனைவி : கதி.

5. செஞ்சூட்டு - சிவந்த உச்சிக் கொண்டை. ''செஞ்சூட்டு வெள்ளோதிமம்'' (மீனாட்சி. காப்பு. 7.) ஓதிமம் - அன்னம்.

6. கொங்கைக்களிறு – முலையாகிய யானை. உருவகம். பணைத் தோள்–திரட்சியையுடைய தோள். ''பணைத்தோள் எருத்தலைப்ப'' (மீனாட்சி. காப்பு. 1.) சாயல் – அழகு. அத்தி – விநாயகர்.

7. வண்டலிழைத்தல் – மணலால் சிற்றில் இழைத்து விளையாடுதல். ''மணற் குன்றிலே வண்டலிழைத்து விளையாடவும்'' (பொருந. 187. நச். உரை.) மனவு—சங்குமணி. ''அகவல் மகளே அகவல் மகளே மனவுக்கோப் பன்ன நன்னெடுங் கூந்தல்'' (குறுந். 23.) அரதனம் – ரத்நம்.

8. களமர் - உழவர். ''இனக்களமர் இசைபெருக'' (பொருந. அடி. 194.) புலம் – வயல். நாறு – நாற்று. சூடு—அரிக்கட்டு ''அக வயல் இளநெல் லரிகாற் சூடு'. (பரிபாடல் 7. 27.) பொன்னி – காரணப் பெயர். புனல் நாடு - சோழநாடு.

9. எழிலி — மேகம். அரவசயனர் – திருமால். வளவர் — சோழர், வழுதி – பாண்டியன்.

10 அலகில் – முடிவில்லாத. கலப மயிலின் ''கலபம் விரித்த மயிற்பேடே'' (முத்துக் குமார. சப். 10) நயனம் – கண்.

7. அம்புலிப்பருவம்

1. தமரம்-ஒலி. சசி—சந்திரன். திமிரம்—இருட்டு. காயம் — உடல். இச்செய்யுள் சந்திரனுக்கும் முருகக்கடவுளுக்கும் சிலேடை. அம்புலியைச் சாமபேத தான தண்ட வகையால் அழைப்பாராகி இதன்கண் சாமத்தை மேற்கொண்டு கூறுவர். சாமம் என்பது இங்கு ஒப்பு என்னும் பொருளில் கொள்ளப்படும்.

5. நல்லார்கள் -பெண்கள். வாரிதி - கடல். வானுடு - தேவலோகம். சுரபி – காமதேனு. ஐந்தரு -அரிசந்தனம், கற்பகம், சந்தானம், பாரிசாதம், மந்தாரம் என்ற ஐந்து தெய்வத் தன்மையுடைய மரங்கள். ''ஐந்தரு நிழற் கீழரசு வீற்றிருக்கும்'' (பண்டார மும்மணிக் கோவை, 50. 28.) செப்பும் – சொல்லும். திசைச் சொல். சரதம் - உண்மை. ''வேத முடிவிது சரத மென்றுன் (கம்ப. இரணியன் வதை. 122.) அம்புயாசனர் —பிரமன்.

6. கருமநிகளம் - கருமபந்தம். அண்டபகிரண்டம் பூகோளமும் அதன் புறத்தவான கோளமும் அண்டபகிரண்டமும் மாயா விகாரமே''. (தாயு. பரிபூ 4.) ''அண்டபகி ரண்டமும்'' (மீனாட்சி. அம்புலி. 4.)

7. சூல் - கருப்பம். உளைந்து - முதிர்ந்து. "சூலுளைந்து" (சொர்ணபுரி. 23.) "சூலுளைந்து உமிழ்ந்த" (சிதம்பர மும்மணிக் கோவை. 5. அடி. 12.) அம்போருகம் - தாமரை. உடுவர்க்கம் - நட்சத்திரக் கூட்டம்.

சரவண தீர்த்தம் : திருப்பரங்குன்றத்தில் உள்ளதோர் தீர்த்தம். மயக்கத்தையும், வஞ்சகத்தையும் போக்க வல்லது. சரவண தீர்த்தம். அதில் நீராடினுல் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்குவித புருடார்த்தங்களையும் அடைவார்கள் என்று திருப்பரங்கிரிப்புராணம் கூறுகின்றது. கை முகிழ்த்து - கைகளைக் கூப்பிக் கொண்டு. இன்னிழல் — இனிமை+நிழல்.

"இடுகின்ற தெய்வம் இலந்தையடியினிலும் இடும்" என்ற பழமொழியை ஆசிரியர் இச்செய்யுளில் கூறியுள்ளார்.

8. ஆயிரத்தெட்டு அண்டங்கள் :—சூரபத்மன் சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து "பிருதிவியிலுள்ள ஆயிரங்கோடி அண்டங்களுள் ஆயிரத்தெட்டு அண்டங்களை நூற்றெட்டு யுகம் ஆளும்படியான வரத்தைப் பெற்றுன் என்பது வரலாறு. "அண்டங்கள் நடுக்கமுற ஆயிரத்தெட்டு அண்டம் ஆண்டிடு குருர சூரன்" (திருத்தணிகை விருத்தம். 4.) "ஆயிரத் தெட்டெனும் அண்டம் யாவையும்" (கந்தபு. அசுர காண்டம்)

ஆசிரியர் : 'உயிர் தன்னை மயிலாக்கி' என்று கூறியுள்ளது சிறப்பு.

9. இலகு - விளங்குகின்ற. மும்மதம் — மதயானையின் கன்ன மதம், கைமதம், கோசமதம் என்ற மூவகை மதநீர். "பொழிந்திழி மும்மதக் களிற்றின் மருப்பும்" (தேவாரம்) யானைமுகன்- விநாயகர். இரை - உணவு. அரவம் - பாம்பு. (ராகு, கேது என்ற பாம்பு.) நெற்கழனி - நெற்பயிரையுடைய வயல்கள்.

10. மதி - சந்திரன். நவவீரர் - ஒன்பது வீரர்கள். காசினி - பூமி. ஒகை - உவகை. இச்செய்யுள் தண்டோபாயம்.

8. சிற்றில் பருவம் : 1. அஞ்சுமுகத்தான் - சிவபெருமான். விழிக் கயல் - உருவகம். அளியேம் என்பது அறியேம் என்றிருக்க வேண்டுமெனத் தோன்றுகிறது. வஞ்சிக் கொடியார் - பெண்கள். வாது புரிதல் - தருக்கம் செய்தல்.

2. ஐயர்-சிவபெருமான். ''ஆனேறு உயர்த்திட்ட ஐயற்கும்'' (முத்துக்குமார. செங். 5) பயந்தவள் - பார்வதி. அசலம் -மலை. பொகுட்டு - தாமரைக் கொட்டை. ''பொன்னங் கமல மலர்ப் பொகுட்டிற்'' (சொர்ணபுரி. வருகை. 6.) சிற்றில் - சிறிய வீடு. சிதையேல்-அழிக்காதே.

3. மறையின் சிரம் – வேதத்தின் முடிபு. வரதன் - பிரமன். வல்லி – கொடி. உந்தி - கொப்பூழ்.

4. தொடலை - மாலை. ''தொடலைக் குறுந்தொடி'' (சிதம்பரச் செய்யுட் கோவை. 62.) சயிலம் - மலை. போதகம் - கன்று. பொங்கர் - சோலை.

5. கருமத் தாழ்வு - செயலின் இகழ்ச்சி. மட்டுஇல் – அளவில் லாத. எண்ணான்கு - முப்பத்திரண்டு. அறம் வளர்த்த - தருமத் தைச் செய்த. முப்பத்திரண்டு தருமத்தைச் செய்தவள் பார்வதி. சிட்டர் - நல்லொழுக்கமுடையவர்.

6. காலாயுதம் - கோழி. ''காலாயுதக்கொடி'' (முத்துக் குமார. தாலப். 9.) ''காலாயுதக்கொடியோன் அருளாய கவசம் உண்டு'' (கந்தரலங்காரம். 86.)

கள் - தேன். கூத்தன் கான்முளை - சிவபெருமானின் மகன். ஆட்டை - ஆடு. ''துங்கன் வஞ்சன் சங்கன் மைந்தன் தருமகன் முநிதழல் வருதகர்'' (திருப்புகழ். 115.) நாரதர் ஒரு யாகம் செய் தார். அந்த யாகத்தில் பேராற்றல் படைத்த ஒரு ஆடு தோன்றி உலகங்களையெல்லாம் துன்புறுத்தி அழிக்கத் தொடங்கியது. தேவர்கள் முருகனிடம் சென்று முறையிட்டார்கள். முருகப் பெருமான் வீரவாகு தேவரை அனுப்பி அந்த ஆட்டுக்கிடாவை அடக்கித் தமக்கு வாகனமாகக் கொண்டார்.

7. நெடுங்கண் ஓராயிரத்தோன் - இந்திரன். ''அக்கமொரு கோடி பெறு வஜ்ரபாணி'' (பூத வேதாள வகுப்பு) கோடி என்பது ஆயிரத்தைக் குறிக்கும். ''கோட்டும் ஆயிர நாட்டன்'' (திருப்புகழ். 1223.) ''கண்ணாயிர முடையான் முளை கனவில்'' (பாம்பன் சுவாமிகள் பெருவேண்டுகோள். 1.) ஆரல் - கார்த்திகைப் பெண் கள். ''அகலிரு விசும்பின் ஆஅல்போல'' (மலைபடுகடாம். 100) 'ஆரல் என்னும் பெயர் ஆல் எனக் குறைந்து நின்றது. கதி - மோட்சம்.

8. கண்டம் ஒன்பதின் எல்லை; வடகடலிலிருந்து சிருங்கமலை வரையில் குருவருடமும், சிருங்க மலையிலிருந்து சுவேதமலை வரை

யில் இரணிய வருடமும், சுவேதமலையிலிருந்தும் நீலமலை வரையில் இரமிய வருடமும், மேருமலையைச் சூழ்ந்த இடம் இளாவிருத வருடமும் மாலியவான் மலையிலிருந்து கீழ்க்கடல் வரையில் பத்திராசுவ வருடமும், கந்தமாதன மலையிலிருந்து மேல்கடல் வரையில் கேதுமால வருடமும், நிடத மலையிலிருந்து ஏமகூட மலை வரையில் அரி வருடமும், எமகூடம் முதல் இமயம் வரையில் பாரத வருடமும் ஆகும்.

சம்பூத்தீவிற்கு அரசனாகிய அங்கிதீரன் தன் புதல்வர்களாகிய பாரதன், கிம்புருடன், அரி, கேதுமாலன், பத்திராசுவன், இளாவிரதன், இரமியன், இரணியன், குரு என்னும் ஒன்பது புதல்வர்களுக்கும் அத்தீவை ஒன்பது கண்டமாக்கிக் கொடுத்தான் (கந்த புராணம். அண்டகோசப் படலம்) கோகனகத்தோன் - பிரமன். முனிவது - சினம் கொள்வது.

9. இழைத்த - கட்டிய. நிகர்க்கும் - ஒத்திருக்கும். அதற்கு - அச்செயலுக்கு. இரங்கேம் - வருத்தப்பட மாட்டோம். மேவு - பொருந்த. விண்ணுநிபர் - தேவர்கள். விரை - வாசனை. "விரைத் தொடை" (மீனாட்சி. நீராடல். 9.)

10. பாயல் - படுக்கை. பரந்தாமன் - திருமால். வாரிசப் பொகுட்டிற் பரமேட்டி - பிரமன். மகவான் - இந்திரன். உபயம் - இரண்டு. கனகக்கடம் - தங்கக்குடம். உமையம்மையின் கொங்கையைக் கனகக்குடம் என்று ஆசிரியர் கூறுகின்றார்.

9. சிறுபறைப் பருவம் :-1. மாசு - குற்றம். இந்துசிலை - சந்திரக் காந்தக் கல். உப்பரிகை - மேல்மாடம். வேலை - சமயம். ஆசு - குற்றம். அகினறும் புகை - அகில்+நறும் + புகை. பரியங்கம் - கட்டில். தேசு - ஒளி.

2. ஆதவன் - சூரியன். சண்டம் - கொடுமை. அந்தரம் - ஆகாயம். நானிலம் - குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம். வன்பாலை - கொடிய பாலை நிலம்.

வாளரவு - ராகு கேது என்ற பாம்பு. அகடு - நடு. "மதியகடு தோய்" (தாயு. சச்சி. 6.) பிரமரம் - வண்டு. நிரந்தம் - முடிவு இல்லாமல். சீதளம் - குளிர்ச்சி. சிறுபறை - ஒருவகைத் தோற்கருவி. "யாழுங்குழலும் அரிச்சிறு பறையும்" (பெருங். உஞ்சை. 37, 90)

3. திவவி - யாழ்த்தண்டிலுள்ள நரம்புக்கட்டு. "செவி நேர்பு வைத்த செய்வுறு திவவின்" (திருமுருகு. 140.) "மாடகத் திவவி யாழ்" (பண்டார மும்மணிக்கோவை 17: 13) தீஞ்சொல் - இனிய

சொல். ''தீஞ்சொற் பனுவல்'' (சகலகலாவல்லிமாலை. 6.) வரிசிலை: ''வரிசிலை கொண்டு'' (மதுரைக் கலம்பகம். 56.) ''வரி வில்லானும் இளையவன்'' (கம்ப. சுந்தர. உருக்காட்டு. 75)

4. ககனம்-ஆகாயம். ஐங்கதி-மல்லகதி, மயூரகதி, வானரகதி, சசகதி, சரகதி. மல்லகதி : நான்கு கால்களையும் தூக்கி ஓடுதல்: மயூரகதி: மயில் நடைபோன்ற கதி. வானர கதி: குரங்கைப் போல நடக்கும் நடை. சசகதி: முயலின் ஓட்டம்போன்ற நடை. சரகதி: அம்புபோல் செல்வதாகிய நடை. ''ஐங்கதி நடாத்திக் காட்டி'' (பரஞ்சோதி. திருவிளையாடற்புராணம். மெய்க்கா. 37.) புரவி - குதிரை. விண்தலம் - ஆகாயம். கருங்களமர் - உழவர்கள்.

5. துணர் - பூங்கொத்து. ''பொற்றுணர் பொதுளிய'' (பண்டாரமும். மணிக்கோவை 14.11.) பல்லவம் - தளிர். கோகிலம் - குயில். கொம்பர் - இறுதிப்போலி. அளி - வண்டு. கற்றிரள் - கோவர்த்தனமலை. தீம்பால் - இனிமையான பால். வாரளகம் - நீண்ட கூந்தல். புலர்த்தல் - உலர்த்துதல்.

6. வேதம்-நான்கு வேதங்கள். ஆகமம்-ஆகம சாத்திரம். அங்கம்-வேதாங்கங்கள்: அவை: சிஷை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம், கல்பம். நியதி - முறை. எழுநா - அக்னி, இடுபலி : வினைத்தொகை. ஐவகை வேள்வி: பிரம வேள்வி, (வேதம் ஓதல், வேதம் ஓதுவித்தல்) பிதிர்வேள்வி, (தருப்பணஞ் செய்தல்) தேவ வேள்வி, (வேட்டல்) பூதவேள்வி, (பலியிடுதல்) மானுட வேள்வி, (விருந்தோம்பல்)

''தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்
கைம்புலத்தா றோம்ப றலை''. (குறள், 43.)

7. மொய்ம்பு - வலிமை. தானவர் - தனு என்பவளின் சந்ததியார். நிசாசரர் - இரவில் சஞ்சரிப்பவர்கள். வலாரி - இந்திரன். ''வலாரி யாதி விண்ணோர்'' (தணிகைப் புராணம். 24.)

8. அம்பரவும்பர் - தேவர். அசபை = அஜபை - மந்திர வகை. எச்சமில் - குறைவில்லாத. சோடசதானம் - பதினாறுவகை தானம்.

முச்சகம் - சுவர்க்கம், பூமி, பாதாளம்: ''முச்சக நிழற்றும் முழுமதி'' (நன்னூல். சூ. 258.) மெச்சிய - புகழ்ந்த.

9. பயோதரம்- மேகம் தாரணி - பூமி. அவுடதம் - ஔஷதம். குறமாது-வள்ளி. விரகு-தந்திரம்

10, உடுக்கணம் - நட்சத்திரக் கூட்டம். பீனம் - பெருத்த. பெட்பு - அன்பு. உதரம் - வயிறு. துப்புறழ் - பவளத்தை வென்ற. "துப்புறழ் தொண்டைச் செவ்வாய்" (சீவக. 107, 550) சீதளசித்திரகூடன் - குளிர்ச்சி பொருந்திய சித்திரகூட மலையில் எழுந்தருளியுள்ள இறைவனின் மகன்.

10. சிறுதேர்ப் பருவம் : 1. துரங்கம் - குதிரை. வெள்ளம் - ஒரு பேரெண். பகழி – அம்பு. திருமால் மகள் - வள்ளி.

2. குருதி - இரத்தம். தகுவர் - அரக்கர். தெங்கினவன்காய் - தேங்காய், தட - உரிச்சொல். சங்கிராமம் - போர்.

3. அவுணர்குலமாதர் - அரக்கியர்கள். கரகநீர் - கமண்டல நீர்.

4. வெஞ்சமம் - கொடியபோர். வனசம் - தாமரை. பானல்-வயல். குவலயம்-பூமி

5. அலகைப்பந்தி - பேய்க் கூட்டம். "அலகைத் திரள்" (மீனாட்சி. சப்பாணி. 6.) தேக்கெறிந்து - ஏப்பம் விட்டு.. களவேள்வி செய்து - பகைவரைவென்று போர்க்களத்தைத் தன தாக்கிக் கொண்டு வேட்டல். "படக்கள வேள்வி செயாக்" (முத்துக்குமார. ச. 8.) குரவைக்கூத்து - கைகோத்து ஆடுதல். இங்குப் பேய்க்கூத்து. இது முன்றேர்க்குரவை, பின்றேர்க்குரவை என்று இருவகைப்படும். சீயமுகன் - சிங்கமுகாசுரன்.

6. நறுந்தெரியல் - வாசனையுள்ள மாலை. காசு - குற்றம். வடவை - வடவாமுகாக்கினி. பிறங்கல் - மலை. உந்துகென்ன: அகரம் தொகுத்தல் விகாரம்.

7. கொம்பர் : இறுதிப்போலி. களபமுலை "களபக்கொங்கை (மதுரைக் கலப்பகம். 21) கன்னிகாரம்- கோங்கு. "கன்னி காரத்து ஒருத்தி தோன்றி" சிலப் 11, 110)முகை - மொட்டு. வாவி - குளம் வாஞ்சை—விருப்பம். தண்டலை - சோலை. பொற்றுகில்– பொன்னல் செய்யப்பட்ட ஆடை .(பட்டுப் புடைவை) தோகையர்கள்—பெண் கள். நகை-புன்சிரிப்பு.